2017


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA




# வழிகாட்டல்

## 2017 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

# வழிகாட்டல்:
# 2017 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்


*சமர்ப்பிப்பவர்*

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

ஆளுநர்

இலங்கை மத்திய வங்கி


*2017 சனவரி 3*

# 1. அறிமுகம்

மேதகையீரே, நாணயச் சபை உறுப்பினர்களே, துணை ஆளுநர்களே, மத்திய வங்கி அலுவலர்களே, கௌரவம் மிக்க விருந்தினர்களே, சீமாட்டிகளே, கனவான்களே.

2007இல் மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட வழிகாட்டலைச் சமர்ப்பிப்பது மிக முக்கியமான பாரம்பரியமொன்றாக விளங்கி வருவதுடன் நாம் இன்று சமர்ப்பிப்பது 10ஆவது கூற்றாகும். நாம் பகிர்ந்து கொள்ளும் **கொள்கை நெறிப்படுத்தல்கள்** எமது நடுத்தர கால கொள்கைகளை மிகக் கூடியளவிற்கு **ஊகிக்கக்** கூடியதொன்றாகவும் **வெளிப்படையான**தொன்றாகவும் மாற்றியிருப்பதுடன் அது எதிர்காலத்தில் உங்கள் சொந்தத் திட்டங்களையும் உங்கள் தொழிற்பாடுகள் சார்ந்த முறையியல்களையும் வடிவமைத்துக் கொள்ள உதவும். இது எங்கள் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் கூடியளவிற்குத் தெளிவான தன்மையினையும் உறுதிப்படுத்தும்.

இப்பின்னணியில் **தனியார் துறை மற்றும் அரச துறை தொழிற்பாடுகளிடையே சௌகன்யமான நோக்கத்தையும் மிகச் சிறந்த இணைப்பினையும் ஏற்படுத்துவது எமது கொள்கைகளையும் வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவது** தொடர்பான காத்திரமான தன்மையினை அதிகரித்து அதன் மூலம் எமது பொதுவான அபிவிருத்தி இலக்குகளை எய்த உதவும் என நாம் நம்புகிறோம்.

எனவே, இவ்வாண்டிற்கான வழிகாட்டலைச் சமர்ப்பிப்பதற்கு நான் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சீமாட்டிகளே, கனவான்களே, **இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்குடன் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை அடைவதும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணுவதும் மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களாக விளங்குவதனை** நீங்கள் அறிவீர்கள். எமக்கு வழங்கப்பட்ட பொறுப்பாணையினைக் கூட்டாக ஒன்றுசேர்ந்து வழங்குவது எம் முன்னாலுள்ள மிகப்பெரும் முன்னுரிமையாகும். இலங்கை மத்திய வங்கியின் கணிசமான மூலவளங்கள் நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் இக்குறிக்கோள்களை அடைவதன் மீதும் எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான முகவர் மற்றும் துணைப் பணிச் செயற்பாடுகளை ஆற்றுவதன் மீதும் செலவிடப்பட்டு வருகின்றன.

2016ஆம் ஆண்டுப் பகுதியில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு பல முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். இக்கொள்கைகள் பொருளாதாரத்தில் **கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்தவும் பணவீக்கத்தினை குறைந்த மட்டத்தில் பேணவும் உதவின.** அதேநேரம் நாம் உறுதியான மற்றும் வலுவான நிறுவனங்கள் காத்திரமானதும் தீவிரமானதுமான சந்தைகள் அதேபோன்று பாதுகாப்பானதும் ஆற்றல்வாய்ந்ததுமான கொடுப்பனவு பொறிமுறைமைகள் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் நிதியியல் துறையுடன் தொடர்பான பல கொள்கைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றோம்.

முக்கிய குறிக்கோள்களுடன் தொடர்பான எமது மையத் தெரிற்பாடுகளுக்குப் புறம்பாக, பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தச் செயலாற்றத்தினையும் உயர்த்துவதற்கு பங்களிக்கும் விதத்தில் நாம் ஆற்றிய பல **துணைத் தொழிற்பாடுகள்** பற்றியும் மேலோட்டமாக குறிப்பிட விரும்புகிறேன்.

முன்மதியுடைய இடர்நேர்வுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான காலப்பகுதியொன்றில் சாத்தியமானளவிற்குக் குறைந்த செலவில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளும் அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளும் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மத்திய வங்கி **பொதுப்படுகடனை** முகாமைப்படுத்தி வருகின்றது. **செலாவணிக் கட்டுப்பாட்டுத்** திணைக்களமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இருவருக்கும் மிகத் தூண்டுதலளிக்கும் வெளிநாட்டுத் துறைச் சூழலொன்றினை உருவாக்கும் பொருட்டு பல்வேறு வழிமுறைகளையும் முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பில் மேலும் முன்னேற்றங்களை அளிப்பதற்காக **புதிய செலாவணிச் சட்டம்** வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் தாராளமயப்படுத்துவதற்காக இன்னும் பல வழிமுறைகள் எடுக்கப்படவுள்ளன. இலங்கை மத்திய வங்கி நாட்டின் மிகப் பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமான **ஊழியர் சேம நிதியத்தின்** முகாமையாளராகவும் விளங்குகின்றது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் மாகாண அலுவலகங்களின் நடவடிக்கைகளினூடாக மத்திய வங்கி வேளாண்மைத் துறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் அதேபோன்று நுண்பாக நிதித் துறைக்கும் கொடுகடன்

வழங்கலை வலுப்படுத்த எதிர்பார்க்கிறது. இதன் மூலம் கடன் வசதிகளின் கிடைப்பனவு பெருமளவிற்கு உறுதிப்படுத்தப்படும். அத்துடன் நாணய வெளியீட்டின் ஏக அதிகாரி என்ற முறையில் வங்கி அனைத்துக் காசுக் கொடுக்கல்வாங்கல்களும் சுமுகமாக இடம்பெறுவதனைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தும்.

கொள்கை நடவடிக்கைகளைத் தொடர்வதிலும் எமது பொறுப்புக்களை ஆற்றுவதிலும் தொடர்பூட்டல் மிக முக்கியமானதொரு பகுதியாக விளங்குவதாக நாம் கருதுகிறோம். மிகத் **தெளிவான தொடர்பூட்டலினதும் அதிகரித்த வெளிப்படையான** தன்மையினதும் மிகப் பெரிய முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு எதிர்காலம் கருதிய எமது **முன்னோக்கிய கொள்கைகளைத்** தெளிவாகப் பிரகடனம் செய்வதற்கு நாம் முன்னுரிமையளிக்கின்றோம். இது, பொருளாதார முகவர்கள் கூடியளவு தகவல்களின் அடிப்படையில் தமது பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள உதவும்.

சீமாட்டிகளே கனவான்களே, நாம் **சவால்மிக்கதொரு உலகில்** வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இலங்கை உயர் நடுத்தர வருமான பொருளாதாரமொன்றிற்கு படிப்படியாக மாற்றடைந்து வருகின்றது. எனினும், அரசாங்கத்தின் குறிக்கோள்களையும் மக்களின் அபிலாசைகளையும் அரச தனியார் துறை வகிபாகத்தின் மீதான **"வழமையான வியாபாரம்"** என்பதனூடாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அரச - கொள்கைத் தயாரிப்புக்கள் **முன்கூட்டிய** செயற்பாடு சார்ந்ததொன்றாக இருத்தல் வேண்டும். இது **கூடுதலானளவிற்குத் தரவுகளை** அடிப்படையாகக் கொண்டதாகவும் குறுங்கால **அரசியல் சந்தர்ப்பவாதங்களின்** செல்வாக்கினால் **குறைந்தளவிற்குச் செல்வாக்குச்** செலுத்தப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். அதேபோன்று தனியார் துறையும் அதன் இடர்நேர்வு மனோபாவத்தினை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதுடன் மேம்பட்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் வியாபாரத்திற்குத் தூண்டுதலளிக்கும் இயலுமை வாய்ந்த வியாபாரத்திற்கான சூழல் என்பனவற்றினால் உருவாக்கப்பட்டுள்ள வாய்ப்புக்களின் அநுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நாம் அனைவரும் முன்னேற்றங்கள் விரைவுபடுத்தப்படட வேண்டுமென விரும்புகின்றோம். ஆனால் பயணிக்கும் திசை தெளிவாக சாதகமானதாகவே காணப்படுகின்றது. பொருளாதாரத்தினை உத்வேகம் மிக்க வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது தொழில்நிலை உருவாக்கம் மற்றும் வருமானம் என்பனவற்றிற்கு அவசியமான வழிமுறைகளுடன் பற்றிக் கொண்டுள்ள கடப்பாடுகளுக்குட்பட்டு சீர்திருத்தங்கள் தொடர்பான நன்மைகளும் மாற்றங்களின் வேகமும் விரைவுபடுத்தப்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மத்திய வங்கி என்ற முறையில் நாங்கள் **முக்கியமான வகிபாகமொன்றினைக்** கொண்டிருக்கின்ற வேளையில் **மாற்றங்களுக்கான மிகுந்த தேவைகளுக்கு** மத்தியிலும் நாம் இருக்கின்றோம். நாட்டினை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் பல புதிய முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. உலகளாவிய பொருளாதாரம் இன்னொரு நிலைமாற்றுக் காலப்பகுதியொன்றினூடாகச் சென்று கொண்டிருக்கும் வேளையில், இது இடம்பெற்று வருகின்றது. எனவே, இது உண்மையில் **சவாலுக்குரிய நேரமே.** இது நாம் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்தவர்களாகவும் தெளிவான பெறுபேறுகளின் மீது மிகுந்த கவனம் மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டுமென கோருகின்றது.

இக்கட்டத்தில், **பரந்த நோக்குடன்** இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான எனது சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

சுதந்திரத்திற்கு முன்னைய இலங்கையின் பொருளாதாரத்தினை நாம் மீளாய்வு செய்யும் பொழுது, நாம் சிறந்த முறையில் அதனை மேற்கொண்டமை மிகத் தெளிவாகும். மத்திய வங்கியின் பின்னணியில் பாரிய இறைப் பற்றாக்குறையினால் உருவாக்கப்பட்ட பொருளாதாரத்தில் நீண்ட காலமாகக் காணப்படும் மிகையான **கூட்டுக் கேள்வி நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை சிக்கலாக்கியிருக்கிறது.**

எனினும், **இலங்கை தற்பொழுது சுதந்திரத்திற்குப் பின்னர் இந்நிலைமையினை சீர்செய்வதற்கான மிகச் சிறந்த வாய்ப்பொன்றினை எதிர்நோக்குவதாக** நான் நம்புகிறேன். குறிப்பாக நாடு உள்நாட்டு மோதல்களால் அல்லது பின்னோக்கிய கொள்கைகளினால் நாடு பாதிக்கப்படவில்லை.

இன்று இலங்கை அபிவிருத்தியில் **புதிய முன்னோக்கிய பாய்ச்சலொன்றினை** எடுத்துக்காட்டுகின்றது. இப்பின்னணியில், உத்வேகம் மிக்கதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான வளர்ச்சியையும் தொழில்நிலை உருவாக்கத்தினையும் பேணி வளர்க்கும் விதத்தில் முதலீடுகளைக் கவர்வதற்காக நாட்டின் **மிகச் சிறந்த புவியியல் அமைவிடத்தினையும் சாதகமான பன்னாட்டு உறவுகளினதும்** தன்மைகளை ஊக்கவிக்கும் விதத்தில் உறுதியான அத்திவாரமொன்றினை வழங்குவது மத்திய வங்கியின் பொறுப்பாகும். இலங்கை மிக விரைவாக வளர்ந்துவரும் பாரிய பொருளாதார நாடான இந்தியாவிலிருந்தும் இருபது மைல் தூரத்திலேயே காணப்படுகிறது. சீனாவின் கடல்பட்டுப் பாதையின் மத்தியிலும் அமைந்திருப்பதுடன் அதிர்ஷ்டவசமாக கிழக்கிலும் தென்கிழக்காசியாவிலும் மிகையான மூலதனங்களைக் கொண்ட பல நாடுகளுடன் மிகச் சிறந்த தொடர்புகளையும் பேணி வருகின்றது.

நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதனைப் போன்று, நீடித்தநிலையான வளர்ச்சிக்கு **வலுவான பேரண்டப் பொருளாதார அடிப்படைகளும்** பொருளாதாரத்தின் போட்டித்தன்மையினை அதிகரிக்கும் **அமைப்பியல் சீர்திருத்தங்களின்** நடைமுறைப்படுத்தலும் **வியாபாரச் சூழலை மேம்படுத்துவதும்** அவசியமானவைகளாகவுள்ளன.

தற்பொழுது நாம் எதிர்நோக்கிவரும் சவால்களை, மிகப்பெரும் நிச்சயமற்ற உலகளாவிய நிலைமைகளுக்கு மத்தியிலும், நாட்டின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளில் **நீடித்துநிலைத்திருக்கும் சமநிலைத்தன்மையினை** வழங்கும் கொள்கைகளுடன் சேர்த்து எதிர்கொள்ளுதல் வேண்டும்.

பல தசாப்தங்களாகக் காணப்பட்ட உறுதியற்ற பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை எவ்வித ஒழுங்குமுறைகளுமின்றி உறுதிப்படுத்த முடியாது என்பதனை நாம் ஏற்றுக்கொள்வது முக்கியமானதாகும். **இது குறுங்காலத்தில் சில வலிகளை ஏற்படுத்துவது தவிர்க்க** முடியாதது. எனினும், ஏற்கனவே ஆயத்தநிலையில் இருக்கும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக **மிக நிச்சயமான எதிர்காலமொன்றினை** அடைந்து கொள்ளக்கூடிய சாத்தியங்கள் நிறையவே காணப்படுகின்றன. இதனை நனவாக்குவதற்கு, உத்வேகம் மிக்க பேரண்டப் பொருளாதார அடிப்படையில், மேம்பட்டுவரும் உற்பத்தியாக்கம்/ போட்டித்தன்மை மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட மேம்பட்ட வியாபாரச் சூழல் ஆகிய மூன்று தூண்களைச் சுற்றிக் காணப்படும் ஒன்றிய சீர்திருத்தங்களுக்கான தேவையின் அடிப்படையில் **அரசியல்வாதிகள், கொள்கை வகுப்போர் மற்றும் பொதுமக்களிடையே ஒத்ததன்மை**யொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அனைத்து இலங்கையர்களுக்கும் நன்மைகளை உருவாக்கக்கூடிய விதத்தில், உயர் பெறுமதிகூட்டப்பட்ட தொழில்முயற்சியாண்மை, உருவாக்கம் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றினைக் கொண்ட மையக் கருத்தொன்றின் மீது தவிர்க்க முடியாத புதிய **பொருளாதார வளர்ச்சி மாதிரியினைப்** பூர்த்தி செய்வதற்கு, நாட்டிற்காக நாம் **திடமான அத்திவாரமொன்றினை** நாம் இட வேண்டியிருக்கும்.

இலங்கைப் பொருளாதாரத்தின் மைய பலயீனமாகக் காணப்படும் பாரிய இறை மற்றும் வர்த்தகப் பற்றாக்குறைகளின் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக பெருப்பிக்கப்பட்ட பல **அமைப்பியல் பிரச்சனைகளை** நாடு கொண்டிருக்கிறது. **இரட்டைப் பற்றாக்குறையினைக் கொண்டிருக்கும் நாடு** நிச்சயமற்ற தன்மையில் பாதிக்கப்படும் தன்மையினையும் தளம்பலான உலகளாவிய பொருளாதார சூழலையும் அதிகரிக்கும்.

**உறுதியற்ற வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, பொருளாதாரத்தில் மிகையானதும்** நியாயப்படுத்த முடியாததுமான கேள்வியைத் தூண்டும். மிகையான கேள்வி காணப்படும் பொழுது அது **பணவீக்க அழுத்தங்களுக்கு** வழியேற்படுத்துவதுடன் பொருளாதாரத்தில் **உயர்ந்த பெயரளவு வட்டி வீதங்களுக்கும்** காரணமாகுவதுடன், உள்நாட்டு வழங்கலில் காணப்படும் வரையறைகளைக் கவனத்தில் கொள்கையில் இறக்குமதிக்கான உயர்ந்த மனோபாவமும் காணப்படுகிறது. அத்தகைய நிலைமை சென்மதி நிலுவையின் மீதும் செலாவணி வீதங்களின் மீதும் அழுத்தத்தினை ஏற்படுத்தும்.

கடந்த பல தசாப்தங்களாக இதுவே இலங்கையின் அனுபவமாகக் காணப்படுகின்றது. இது வெற்றி பெற்ற கிழக்கு மற்றும் தென்கிழக்காசியா நாடுகளின் கொள்கைகளுக்கு மாறானதொரு நிலையைக் குறிக்கிறது. அந்நாடுகள் **உத்வேகம்மிக்க இறைப் பெறுபேறுகளையும் குறைந்த பணவீக்கத்தினையும் குறைந்த வட்டி வீதங்களையும் குறைத்து மதிப்பிடப்பட்ட மற்றும் போட்டித்தன்மைத்தான செலாவணி வீதங்களையும் எய்திருக்கின்றன.**

அடுத்துவரும் ஒவ்வொரு கட்டங்களும் மிக ஆபத்து வாய்ந்தனவாக இருப்பதனால் நாம் மீண்டும் மீண்டும் சகடவோட்டமான சுற்றுவட்டமொன்றினை தொடர முடியாது. எமது குறிக்கோளினை எய்தும் பொருட்டு நாம் உத்வேகமான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் போதுமானளவிற்கு வாய்ப்புக்களை தவறவிட்டு விட்டோம். நாம் மீண்டும் மீண்டும் அவ்வாறு தவறவிடுவது தாங்கிக் கொள்ளக்கூடியதன்று. **கடப்பாடுகளுடன் விரும்பத்தக்க கொள்கை முன்னெடுப்புக்களை** நாம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். நாம் **நீண்ட கால நோக்கினைக்** கொண்டிருக்க வேண்டியதுடன் அதன்படி செயற்படுவதும் மிகமுக்கியமானதாகும்.

அரசியலிலிருந்து பொருளாதாரத்தினை பிரிக்கலாமென நம்புவது வெகுளித்தனமானது. அவ்வாறானதொரு நிலையினை அடையக்கூடிய நாடோ சமூகமோ இல்லை. எனினும், பெரும்பாலான சமூக பொருளாதாரக் குறிகாட்டிகளில் ஆசியாவில் யப்பானுக்கு அடுத்ததாக இருக்கும் இலங்கை **இன்று ஏன் முன்னேற்றங்களிலிருந்தும் விலகி பின்தங்கிக் காணப்படுகிறது.**

ஏன் இவ்வாறு காணப்படுகிறது என நாம் கேட்க வேண்டும். அடிக்கடி குறிப்பிடப்படும் கருத்து யாதெனில் ஆசிய நாடுளில், ஆசிய/ பசுபிக் பிராந்தியத்திலுள்ள பன்னாட்டு நாணய நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள ஆசிய/ பசுபிக் பிராந்தியத்திலுள்ள ஆப்கானிஸ்தான் தவிர்ந்த நாடுகளில் இலங்கையின் பொருளாதாரம் மட்டுமே வைத்தியசாலையிலுள்ள

ஒருவருக்குச் சமமான நிலையில் காணப்படுகிறது. எனினும், வைத்தியசாலையிலுள்ள போதும் அதிதீவிர கவனிப்புப் பிரிவில் நாம் இல்லை. மீட்பிற்கான சிகிச்சைகள் அறியப்பட்டிருப்பதுடன்சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டிருப்பது ஊக்கம் தருவதாகவுள்ளது. பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதில் முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளமையினை ப.நா.நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது. மேம்பட்ட இறைச் செயலாற்றம் இம்முன்னேற்றத்தின் இதயமாகக் காணப்படுகின்றது. நிதி அமைச்சரும் அவரின் குழுவும் இதற்காகப் பாராட்டுக்களைப் பெறத் தகுதியுடையனவாகும். எனினும், தொடர்ந்து காணப்படும் சவால்கள் தெளிவான நோக்கத்தினையும் தேவையான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்திக்கான சாத்தியம் தெளிவானதொரு சான்றாகும். மாண்புமிகு பிரதம மந்திரியின் கூற்றிலும் வரவு செலவுத்திட்டப் பேச்சிலும் எடுத்துக்காட்டப்பட்டவாறு அரசாங்கத்தின் திட்டம் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்றிட்டங்களும் முன்னோக்கிச் செல்வதற்கான வழிகாட்டி மரமாக விளங்குகின்றது. எனினும், இப்பொழுதும் தொடரும் பணி யதார்த்தத்தினை நோக்கித் திரும்பும் எண்ணத்தினைக் காட்டுகின்றது. எம்முன்னேயுள்ள பயணமும் நாம் நியாயமான காரணமென்பதுடன் இணைந்திருப்போமாயின், பொருளாதார கொள்கை வகுப்பில் பொருளாதாரம் மற்றும் அரசியல் சமநிலைப்படுத்தலைத் தேவைப்படுத்தும்.

அரசாங்கம் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடங்கியிருக்கின்றது.

வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகளும் எமது பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்தும் விதத்தில் மாற்றப்பட்டு வருகின்றன.

**தரவுகளை பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கை வகுப்பிற்கான கட்டமைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.**

இப்பின்னணியில், வழிகாட்டல் 2017, கடந்த ஆண்டுப்பகுதியில் பின்பற்றப்பட்ட பொருளாதாரம் மற்றும் கொள்கை நடவடிக்கைகளின் அபிவிருத்தியினை மீளாய்வு செய்கிறது. மிக முக்கியமாக, இனிவரும் காலப்பகுதிக்கான கொள்கைகளையம் நிகழ்ச்சித்திட்டங்களையும் தெளிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, வழிகாட்டல் 2017 பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்கிறது.

- பிரிவு 2: 2016இல் உண்மை, இறை, வெளிநாட்டு மற்றும் நாணய மற்றும் இறைத் துறைகளில் காணப்பட்ட செயலாற்றத்துடன் சேர்ந்து பொருளாதாரத்தின் அபிவிருத்திகளை மீளாய்வு செய்தல்
- பிரிவு 3: 2017இற்கும் அதற்கு அப்பாலுக்குமான மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உபாயங்களையம் கொள்கைகளையும் பகுப்பாய்வு செய்தல்
- பிரிவு 4: 2017 இலும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாடு தொடர்பான மத்திய வங்கி கொள்கைகள் மீதான கலந்துரையாடல்
- பிரிவு 5: மத்திய வங்கியின் முகவர் மற்றும் துணைத் தொழிற்பாடுகளினூடாக பரந்த பொருளாதாரத்தினை வலுப்படுத்துவது தொடர்பான முக்கிய கொள்கைகள்
- பிரிவு 6: முடிவுரைக் குறிப்புக்கள்

# 2. 2016இல் பொருளாதாரத்தின் அபிவிருத்திகள்

2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் **இலங்கையின் பொருளாதாரம்** 4 சதவீதம் கொண்ட **மிதமான வளர்ச்சியை** அடைந்தது. முக்கிய துறைகளிடையே, **வேளாண்மை** நடவடிக்கைகள் குறைவடைந்து காணப்பட்டமைக்கு அரிசி, தேயிலை மற்றும் இறப்பரின் பெறுமதிகூட்டல்கள் சுருக்கமடைந்தமையே முக்கிய காரணமாகும். ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட மோசமான வானிலை நிலைமைகளும் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் காணப்பட்ட குறைவடைந்த கேள்வியும் இத்துறையின் வளர்ச்சியைப் பாதித்தன. ஒட்டுமொத்தத் துறையின் மீட்சியிலிருந்தான குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களின் காரணமாக 2016இல் **கைத்தொழிலுடன்** தொடர்பான நடவடிக்கைகள் கணிசமாக வளர்ச்சியடைந்தன. தயாரிப்பு மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. அதேவேளை, பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட வளர்ச்சி செழிப்பானதாகக் காணப்பட்டமைக்கு நிதியியல் பணிகள் மற்றும் மொத்த விற்பனை சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சி ஆதரவாகக் காணப்பட்டது. இதுவரை இடம்பெற்ற இவ்வபிவிருத்திகளின் அடிப்படையில், 2016இல் பொருளாதாரம் ஏறத்தாழ 4.5 - 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. 2017இல் 5.5 - 6.0 சதவீத வளர்ச்சி கிடைக்குமென நாம் எதிர்பார்க்கிறோம்.

2016இல் சில மேல் நோக்கிய அழுத்தங்கள் காணப்பட்ட போதும் பணவீக்கம் தொடர்ந்தும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. வானிலையுடன் தொடர்பான பிரச்சனைகளின் காரணமாக ஏற்பட்ட வழங்கல்பக்க அழுத்தங்களும் அரச வரிக் கொள்ககளின் திருத்தங்களும் பணவீக்கத்தின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையும் பொருளாதாரத்தில் கூலிகள் அதிகரித்தமையும் கூட விலையின் மீது சில கேள்விப்பக்க அழுத்தங்களைத் தோற்றுவித்தன. இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சு 2006/07 = 100) 2015 திசெம்பரின் 2.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 நவெம்பரில் 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் (தே.நு.வி.சு 2013 = 100) 2015 திசெம்பரின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 நவெம்பரில் 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 திசெம்பரின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 நவெம்பரில் 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை மையப் பணவீக்கம் 2016இல் தொடர்ந்தும் மேல் நோக்கிய போக்கினைக் காட்டி பொருளாதாரத்தில் கேள்விப்பக்க நிலைமைகள் உறுதியடைந்தமையினைப் பிரதிபலித்தது. இதன்படி ஒட்டுமொத்தப் பணவீக்கம் எமது நடு ஒற்றை இலக்க இலக்கான 4 - 6 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 இறுதியில் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 6.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

முன்கூட்டிய நாணயக் கொள்கை வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் உயர்ந்த வீதங்கள் விரிவடைந்த நாணயக் கூட்டுக்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் தனியார் துறைக்கான கொடுகடன்கள் ஓரளவு குறைப்பினைக் காட்டின. இது முக்கியமாக அதிகரித்த சந்தை வட்டி வீதங்களின் தாக்கத்தினைப் பிரதிபலித்தன.

இலங்கையின் **வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம்** 2016ஆம் ஆண்டுப்பகுதியில் மிதமானதாகக் காணப்பட்ட போதும் ஆண்டின் பிற்பகுதியில் சில முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன. 2016இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி மீதான செலவினம் 0.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக வர்த்தகக் கணக்கில் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறை 2016இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிநாட்டுத் துறையினைப் பாதுகாக்கும் விதத்தில், **சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்** 2016இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3.0 பில்லியனுக்கு முன்னைய ஆண்டினை விட 14.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2016இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்** 3.1 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் ஐ.அ.டொலர் 6.6 பில்லியனாகக் காணப்பட்டன. இவ்வபிவிருத்திகளின் விளைவாக 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில்

பிரதிபலிக்கப்பட்டவாறு **சேமிப்பு - முதலீட்டு இடைவெளி** ஒடுங்கியது. அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலைக் காட்டிய வேளையில் அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் தேறிய உட்பாய்ச்சலைக் காட்டின. அதேவேளை, நாட்டின் வெளிநாட்டு நிலைமையை வலுப்படுத்துவதற்காகவும் அரசாங்கத்தின் பரந்த பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவியளிப்பதற்காகவும் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து 2016ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை சிஎஉ 1.1 பில்லியன் கொண்ட (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) மூன்றாண்டு **விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றைப்** பெற்றுக்கொண்டது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் 2016 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனாகக் காணப்பட்டது. மேலும், குறிப்பிட்ட சில காலாண்டுகளில் ரூபாவின் மீது கணிசமான தேய்வு அழுத்தங்கள் காணப்பட்ட போதும் 2016இல் ரூபா முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உறுதியாகக் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் இது 3.8 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

2016இல் இறைக் கொள்கை இறைத்திரட்சிச் செயன்முறையினை வலுப்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் ஆர்வம்மிக்க முயற்சிகளின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் விதத்தில் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் இறைச் செயலாற்றம் முன்னேற்றமொன்றினை எடுத்துக்காட்டியது. அரச அரசிறை தொடர்ந்தும் அதிகரித்த போக்கினைக் காட்டிய வேளையில் செலவினத்தினை விரும்பத்தக்க மட்டத்தில் பேணியது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 5.4 சதவீதத்தில் பேண முடியமென அரசாங்கம் உறுதியாக நம்பியது. இது, 2016இல் எய்தப்படும் என்பதுடன் 2017இல் இது 4.6 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்படும்.

2016ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக **பன்னாட்டு நியமங்கள்** மற்றும் **சிறந்த நடைமுறைகளுடன்** இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கியினால் பல கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. முக்கிய வங்கித்தொழில் துறைக்கான குறிகாட்டிகள் ஆரோக்கியமான மட்டங்களில் காணப்பட்ட வேளையில் வங்கியல்லாத் துறை கடுமையான இறை மற்றும் முன்மதியுடைய வழிமுறைகளுடன் செயலாற்றியது.

அதேவேளை, நாட்டின் தேசிய கொடுப்பனவு முறைமைகள் முக்கிய தடங்கல்கள் எதுவுமின்றி சுமுகமாகத் தொழிற்பட்ட வேளையில் மேம்பட்ட வினைத்திறன் மற்றும் பாதுகாப்புடன் நிதியியல் துறையில் மாற்றமடைந்துவரும் கொடுப்பனவுத் தேவைகளுக்கு வசதியளித்தது.

# 3. 2017 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயமும் கொள்கைகளும்

எமது இலக்குகளை அடைவதற்கு **முரண்பாடுகளற்ற தெளிவான பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பொன்று மிக முக்கியமானதாகும்.**

ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின் முக்கிய மூலங்களிடையே விலை உறுதிப்பாடு முக்கியமானதொரு தூணாகும். **விலை உறுதிப்பாடென்பது** பணவீக்கத்தின் குறைந்த, உறுதியான, ஊகிக்கத்தக்க மட்டமென பொருள்படுமென விளக்கமளிக்கப்படுகிறது. இது நாட்டில் உறுதியான நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியையும் தொழில் வாய்ப்பினையும் பேணி வளர்ப்பதற்கான தூண்டுதலையளிக்கும். விலை உறுதிப்பாடென்பது பெயரளவு வட்டி வீதங்களை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கான ஒரு கருவியாகும். இதன் மூலம் பொருளாதாரமொன்று அதன் வளர்ச்சி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள இயலுமைப்படுத்தப்படுகின்ற வேளையில் வாடிக்கையாளர்களும் உற்பத்தியாளர்களும் நம்பிக்கையுடனும் நிச்சயமான தன்மைகளுடனும் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதனை இயலச் செய்கிறது. ஆகவே, நவீன மத்திய வங்கிகள், நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கான முன்நிபந்தனையொன்றாக விலை உறுதிப்பாட்டினை எய்துவதனை முனைப்பான கவனத்தில் கொண்டிருக்கின்றன.

இப்பின்னணியில், நாட்டில் மூன்று முக்கிய துறைகளில் **நன்கு வடிவமைக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்காக** மத்திய வங்கியும் அரசாங்கமும் இணைந்து பணியாற்றுவது பற்றி நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நடுத்தர காலத்தில் இறையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துகின்ற நோக்குடன் **புதிய இறைக் கட்டமைப்**பொன்றினூடாக அரசின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளில் நீண்ட காலமாக உணரப்பட்டுவரும் குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முடிவான வழிமுறைகளை எடுக்கும் செயற்பாடொன்றில் ஈடுபட்டு வருகின்றது. இக்கட்டமைப்பு ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நடுத்தர காலத்தில் இறை உறுதிப்பாட்டினை வலுப்படுத்தும் நோக்கடன், புதிய இறைக் கட்டமைப்புக்களினூடாக அரசாங்கம் அதன் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளிலுள்ள நீண்ட காலம் உணரப்படும் குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக விரும்பத்தக்க வழிமுறைகள் பல மேற்கொண்டு வருகிறது. இக்கட்டமைப்பு ப.நா.நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனை நிறைவேற்றும் பொருட்டு, மத்திய வங்கி நாணயக் கொள்கை தொடர்பில் இரண்டு முக்கிய கொள்கைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தும்.

அ. நாணயக் கொள்கையினை நடத்துவது **நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை** நோக்கிய நடவடிக்கையொன்றினூடாக வலுப்படுத்தப்படும்.

ஆ. நாட்டில் சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீத முறைமையொன்றினை உருவாக்குவதற்காகப் பொருத்தமான விதத்தில் வடிவமைக்கப்பட்டதும் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான **செலாவணி வீத முகாமைத்துவத்திற்கான கட்டமைப்பொன்று** அறிமுகப்படுத்தப்படும்.

ப.நா. நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஒழுங்குகளின் கீழான பரந்த அடிப்படையிலான சீர்திருத்த நடவடிக்கைகள் இம்முயற்சிகளுக்குத் துணையாக அமையும்.

1980 களிலிருந்து இலங்கை மத்திய வங்கி, பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கான அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றாக நாணய இலக்கிடலைப் பின்பற்றி வருகின்றது. இக்கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கையை நடத்துவதில் நாணயக் கொள்கைக் கூட்டுக்கள் முக்கிய பெயரளவு நிறுத்திகளாக பயன்படுத்தப்பட்டதுடன் நாணயக் கூட்டுக்களில் செல்வாக்கினைச் செலுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டின் இறுதிக் குறிக்கோளை எய்தவும் எண்ணப்பட்டது. ஒதுக்குப் பணம் தொழிற்பாட்டு இலக்காகக் கருதப்பட்டதுடன் இக்கட்டமைப்பின் கீழ் விரிந்த பணம் நாணயக் கொள்கையின் இடைநிலை இலக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

இருப்பினும் கூட, நிதியியல் புத்தாக்கங்களுக்கு மத்தியிலும் பணத்திற்கான கேள்வி தொழிற்பாட்டில் காணப்பட்ட உறுதியற்றதன்மை மற்றும் பணத்திற்கும் பணவீக்கத்திற்குமிடையிலான பலயீனமான உறவு முறை போன்ற பிரச்சனைகளைக் கவனத்திற் கொள்கையில் நாணயக் கொள்கையை நடத்துவதற்கான **நாணய இலக்கிடல்** குறைந்தளவு அர்த்தபுஷ்டியுடையதாகவே காணப்படுகின்றது.

எனவே, நாணய இலக்கிடல் கட்டமைப்பில் தங்கியுள்ள நாடுகள் பணவீக்க இலக்கிடல் போன்ற புதிய கட்டமைப்புக்களை நோக்கி நகர்ந்து வருகின்றன.

இவ்வுலகளாவிய நாட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியும் கடந்த பல ஆண்டுகளாக அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை மேம்படுத்தி வருகின்றது.

குறிப்பாக, மத்திய வங்கி நாணய இலக்கிடல் கட்டமைப்பானது **நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல்** கட்டமைப்பொன்றினை பின்பற்றுவதன் மூலம் படிப்படியாக அகற்றப்படும் என்பது பற்றி அலுவல்சார் முறையில் அறிவித்திருக்கிறது.

இவ்வுயர்த்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கி **நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்கத்தில் பணவீக்கத்தினை** உறுதிப்படுத்துவதன் மீது மத்திய வங்கி கவனத்தினைச் செலுத்துகின்ற வேளையில் வளர்ச்சி குறிக்கோள்களுக்கும் செலாவணி வீத முகாமைத்துவத்தின் நெகிழ்ச்சித்தன்மைக்கும் ஆதரவளிக்கும்.

பொதுவாக, பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பென்பது நடுத்தரகால பணவீக்க எதிர்வுகூறலான அறிவிக்கப்பட்ட பல்வேறு எண்ணிக்கையான பணவீக்க இலக்கு, பண்புத்தன்மையினைக் கொண்டிருப்பதுடன் இது முன்னோக்கிய நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கும் பெருமளவு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மைக்கும் வசதியளிப்பதாகவுள்ளது.

பணவீக்க இலக்கிடல் தொழிற்பாட்டு ரீதியில் சிக்கலானது என அறியப்படுகிறது. இது **நாணயப் பரிமாற்றுப் பொறிமுறை முழுவதையும்** பெருமளவிற்கு அறிந்திருப்பதனை தேவைப்படுத்துவதுடன் இது கொள்கை வட்டி வீதங்கள் வங்கிகளுக்கிடையிலான வீதங்களுடனும் இறுதியாக நீண்ட கால வீதங்களுடனும் தொழிற்பாட்டு ரீதியில் இணைக்கப்பட்டிருப்பதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எமது உயர்த்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் கீழ், சந்தையை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களைக் குறிப்பாக, கொள்கை வட்டி வீதங்களையும் விரும்பத்தக்க பாதைகளுடன் சேர்ந்த தொழிற்பாட்டு இலக்காகக் கருதப்படும் **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்களுக்கு** வழிகாட்டுவதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளையும் முனைப்புடன் பயன்படுத்திக் கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம். இது காத்திரமான நாணயக் கொள்கைப் பரிமாற்றலை உறுதிப்படுத்தும்.

இவ்வுயர்ததப்பட்ட கட்டமைப்பின் கீழ், மத்திய வங்கி எந்தவொரு நாணய இலக்கிடலையும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், விரிந்த பணம் ($M_{2b}$) முக்கிய **குறியீட்டு இடைநிலை மாறியாக** விளங்குகின்றது. இது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடத்தைக்கு வழிகாட்டுவதற்கான பொருளாதாரத்திலுள்ள பரந்தளவு திரவத்தன்மை நிலைமைகளைப் பிரதிபலிக்கிறது.

புதிய கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு, பணவீக்க எறிவுகள் உட்பட, பேரண்டப் பொருளாதார எறிவுகள் குறுங்கால அதேபோன்று நடுத்தர கால அமைப்பியல் எதிர்வுகூறல் கருவிகள் மற்றும் நுணுக்கங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தற்பொழுது வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இம்முயற்சியில் மத்திய வங்கி அலுவலர்களில் தொழில்நுட்ப இயலாற்றல்களைத் தரமுயர்த்துவதற்குத் தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் கொள்கை உருவாக்கத்தினையும் இயக்கவாற்றல் மாதிரிப்படுத்தல்களையும் வலுப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி பேரண்டப் **பொருளாதார எதிர்வுகூறல், மாதிரி வடிவமைத்தல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு** ஆகிய துறைகளில் ப.நா. நிதியத்திடமிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று வருகின்றது. எனவே, நாணயக் கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளைப் பலப்படுத்துவதற்கும் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் அமைப்பிற்கு இலங்கை மாறிச் செல்வதற்கு ஆதரவளிக்கும் விதத்திலும் நடுத்தர காலப்பகுதியில் அமைப்பியல் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட **எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறையினை** அபிவிருத்தி செய்வதில் இலங்கை மத்திய வங்கியினாலும் ப.நா. நிதியத்தினாலும் கூட்டு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமை நடுத்தர கால, முன்கூட்டிய கொள்கைப் பகுப்பாய்வு முறைமையொன்றாக இருப்பதுடன் இது முரண்பாடற்ற தர்க்க ரீதியான முறையில் தகவல்களையும் நியாயப்படுத்தல்களையும் ஒருங்கே கொண்டு வருகின்றது.

எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையின் கீழ், மத்திய வங்கி, எதிர்வுகூற்றுக்காகவும் நாணயக் கொள்கையைப் பகுப்பாய்வு செய்வதற்காகவும் அமைப்பியல்சார் பதிப்பினை அடிப்படையாகக் கொண்ட காலாண்டு எறிவு மாதிரியின் அபிவிருத்தியை இறுதிப்படுத்தியிருக்கிறது.

அதேவேளை, மாதிரிகளைக் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பல்வேறு அமைப்பியல் மாற்றங்களை நடைமுறைப்படுத்துகின்ற செயன்முறைகளில் மத்திய வங்கி ஈடுபட்டிருக்கின்றது. இதனை அடையும் விதத்தில் தனியான **மாதிரிப்படுத்தல் மற்றும் எதிர்வுகூறல் பிரிவொன்று** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் தொழிற்பாட்டுச் செயன்முறைகளும்

அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற வேளையில் போதுமான பயிற்சிகளுடன் அலுவலர்களும் வழங்கப்பட்டிருக்கின்றனர்.

மிக முக்கியமாக, நாணயக் கொள்கை வடிவமைப்புச் செயன்முறையிலும் பல மாற்றங்களையும் அறிமுகப்படுத்துவதற்கு எண்ணியுள்ளோம். இதன்படி, **நாணயக் கொள்கை குழுக் கூட்டத்தினை தற்போதைய ஆண்டொன்றிற்கான 12 கூட்டங்களிலிருந்து ஆண்டிற்கு 8 இற்கு குறைப்பதற்கு** மத்திய வங்கி திட்டமிட்டிருக்கிறது. இதன் விளைவாக பொருளாதாரத்தில் காணப்படும் பிந்திய அபிவிருத்திகளையும் அபிவிருத்தி மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட பேரண்டப் பொருளாதார எதிர்வுகூறல்களையும் பகுப்பாய்வு செய்வதற்கு ஏறத்தாழ 5 - 6 வாரங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் நாணயக் கொள்கை வடிவமைப்புச் செயன்முறையில் ஆழமானதும் மிக முன்னோக்கிய ஆழ்ந்த சிந்தனை கொண்டதுமான ஏற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளுக்கான மேற்குறிப்பிட்ட முன்னேற்றங்கள் 2017 இறுதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இச்செயன்முறை தொடர்பில் அறிமுகப்படுத்தப்படவுள்ள சில மாற்றங்களை உள்ளடக்குவதற்கு நாணயச் சட்ட விதிக்கு திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கும்.

மேலும், புகழ்பெற்ற கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் அதேபோன்று தனியார் துறையிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கிய **நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவினை** 2017இல் மீண்டும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம். நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைக்குச் சிறந்த உந்துதலையளிக்கும் விதத்தில் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவின் நோக்கு மற்றும் கருத்துக்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

மேலும், நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பிலும் மத்திய வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் தனியார் துறையின் கருத்தினைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் **இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த ஆலோசனைக் குழுக்களை** நிறுவ எண்ணியுள்ளோம். அத்தகைய குழுக்களை நியமிப்பது பொருத்தமான நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பான கருத்துக்களை உரைப்பதற்கு உதவியாக இருக்குமென நம்புகிறோம்.

நாணயத் துறையின் அபிவிருத்திகளை நாம் தொடர்ந்தும் நெருக்கமாகக் கண்காணிப்பதுடன், எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான நாணய நிலைமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு ஏனைய **பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளின்** ஆதரவுடன் சரியான நேரத்தில் **காத்திரமான நாணயக் கொள்கை வழிமுறைகள்** பின்பற்றப்படும். இதன் மூலம் பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாடு உறுதிப்படுத்தப்படும். அதேநேரம், நாம் குறுங்கால வட்டி வீதங்களை விரும்பத்தக்க பாதையொன்றில் வழிநடத்தும் பொருட்டு பணச் சந்தையில் **திரவத்தன்மை முகாமைத்துவத்** தொழிற்பாடுகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடுவோம்.

அதேநேரம், குறுங்கால வட்டி வீதங்கள் விரும்பத்தக்க பாதையில் பயணிப்பதற்கு வழிவகுக்கும் விதத்தில் பணச் சந்தையில் திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடுவோம்.

நாணயக் கொள்கை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்யும் விதத்தில் நிலையான வீதம் மற்றும் மாறி வீத ஏலங்கள் போன்றவற்றிற்காக மற்றைய நாடுகளின் அனுபவங்கள் என்பனவற்றிற்கு இசைய அவற்றின் தேவைகளையும் சாத்தியமான தன்மைகளையும் பரீட்சித்ததன் பின்னர் அத்தகைய குறிப்பிட்ட வழிமுறைகளை அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம். திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு மாற்றுச் சாதனங்களை வலுப்படுத்த எண்ணியுள்ளோம்.

இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்திலும் அதேபோன்று முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த கொள்கை வழிமுறைகளின் காரணமாக **நடுத்தர காலத்தில் பணவீக்கம் நடு ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** எனவே, பல ஆண்டுகளாக நிலவிய தாழ்ந்த பணவீக்கச் சூழல் நடுத்தர காலத்தில் 4 - 6 சதவீத வீச்சிற்குள் நிலைத்திருக்கச் செய்திருக்கும். இதுவும் ப.நா. நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் குறித்துரைக்கப்பட்ட **பணவீக்க இலக்கிடல்** பிரிவுடன் இசைந்து செல்வதாகக் காணப்படுகிறது.

நாங்கள் குறிப்பாக, **பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களின் தொகுத்தல்** தொடர்பான முறையியல்கள் தொடர்பில் பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொழில்நுட்ப இயலாற்றலைத் தொடர்ந்தும் வலுப்படுத்துவோம். இது, காத்திரமான கொள்கைகளை வடிவமைக்கும் நோக்கத்திற்கான ஆற்றல்வாய்ந்த பொருளாதார பகுப்பாய்வுகளை மேம்படுத்தும் வேளையில் நாணயக் கொள்கையினதும் கொள்கை தொடர்பூட்டலினதும் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தும்.

அதேநேரம், கூடியளவு தகவல்களுடன் கூடிய கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறையில் தனியார் துறை **சொத்து விலைகள்** அதேபோன்று கூலி மற்றும் தொழில்நிலையின் போக்குகள் மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகள் மீதான

புதிய அளவீடு என்பன மீதான புதிய சுட்டெண்களை அறிமுகப்படுத்துவதனூடாக புள்ளிவிபர உள்ளீடுகளை அதிகரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்ற வேளையில் சிறந்த அபிவிருத்திகளைக் கண்டறியும் விதத்தில் ஏற்கனவேயுள்ள அளவீடுகளின் உள்ளடக்கம் மேம்படுத்தப்படும்.

மத்திய வங்கி, கொள்கை பற்றி பெருமளவிற்குத் தெளிவானதும் விளங்கிக் கொள்ளக்கூடியதுமான பல்வேறு ஊடகங்களினூடாக சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொள்கைத் தீர்மானங்களைத் தொடர்ந்தும் வழங்கும். மேலும், **மத்திய வங்கியின் திருத்தியமைக்கப்பட்ட கம்பனி வெப்தளத்தினை** தொழிற்படுத்துதல் இயக்கவாற்றலும் எதிர்வினைப் பண்புகளையும் கொண்ட தரமான விடயங்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தளம்பல்களைக் கொண்ட உலகளாவிய சந்தை நிலைமைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பனவற்றுடன் இரட்டைப் பற்றாக்குறை நாடாக விளங்குகின்றமையினால் வெளிநாட்டு அழுத்தங்களைச் சீராக்குவதற்கு நெகிழ்ச்சித்தன்மை கொண்ட செலாவணி வீதக் கொள்கையைக் கொண்டிருப்பதன் இன்றியமையாத முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அண்மைய அனுபவம், பெருமளவிற்குக் கடன்பாடுகள் மூலம் கட்டியெழுப்பப்படும் வெளிநாட்டு ஒதுக்குகளை தியாகம் செய்வதன் மூலமாக **மிகையாக மதிப்பிடப்பட்ட செலாவணி வீதத்தினைப்** பேணுவதற்கு உறுதியற்றதாகக் காணப்படுவதனை எடுத்துக்காட்டியது. சுமுகமான சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதம், சந்தைத் தலையீடுகளின் மூலம் பாதுகாப்பதற்கு முயற்சிக்கப்பட்டு அது பலனின்றிப் போனமையினால் ஐ.அ.டொலர் 4.0 பில்லியனால் வெளிநாட்டு ஒதுக்கு வீழ்ச்சியடைந்ததன் பின்னர் நாணயம் 14 சதவீதத்தினால் தேய்வடைந்த 2011 - 2012 காலப்பகுதியில் காணப்பட்டவாறு மத்திய வங்கியின் தொடர்ச்சியான தலையீடுகளின் மூலம் செயற்கை முறையில் பேணப்பட்ட உறுதியான வீதங்களைக் கொண்ட காலப்பகுதியின் பின்னர் உயர்ந்தளவிற்கு தடங்கல்களைக் கொண்ட சீராக்கங்களைத் தடுத்தது. எமது ஒதுக்குகளான ஐ.அ.டொலர் 2.1 பில்லியன் செலவிடப்பட்ட பின்னர் 6.5 சதவீதத்தினால் நாணயம் தேய்வடைந்த காலப்பகுதியான 2015இலும் இதையொத்த அனுபவம் காணப்பட்டது. பெருமளவிற்குக் கடன்பாடுகள் மூலம் பெறப்பட்ட நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளின் பெரும் தொகையினை இறுதியில் எந்த வழியிலேனும் தேய்வடைந்து போகும் நாணயத்தினைப் பாதுகாக்கும் வீண் முயற்சியில் செலவிடுவது நீடித்துநிலைத்திருக்க முடியாதது என்பது தெளிவாகும்.

பிறிரெக்ஸ் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் அண்மைய சனாதிபதி தேர்தல் அதேபோன்று பெடரல் றிசேர்வ் வங்கியின் வட்டி வீத உயர்வு; ஐரோப்பாவில் பிரான்சிலும் ஜேர்மனியிலும் நடைபெறவிருக்கும் தேர்தல்; சீனப் பொருளாதாரத்தின் எறிவு செய்யப்பட்ட சரிவு அதேபோன்று இந்தியா, யப்பான், ருஷியா மற்றும் மத்திய கிழக்கு உட்பட இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதார நிலைமைகள் என்பன உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்டிருக்கிறது.

ஐக்கிய அமெரிக்காவின் உள்நாட்டு வட்டி வீதங்கள் வழமை நிலைமையை அடைந்தமையினைத் தொடர்ந்து எண்ணெய் விலைகளில் காணப்பட்ட போக்குகளும் மூலதனப் பாய்ச்சல்களும் குறிப்பாக, முக்கியத்துவம் வாய்ந்தன போல் காணப்படுகின்றன.

அரச வரி அமைப்பிற்குச் செய்யப்பட்ட மாற்றங்கள் வானிலை தொடர்பான அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற வழங்கல் பற்றாக்குறை, அதேபோன்று உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான பண்ட விலைகளின் காரணமாக ஏற்படக்கூடிய அதிர்வுகள் என்பன விலை மட்டங்களில் தற்காலிக வேறுபாடுகளுக்குக் காரணமாகலாம். குறிப்பாக, தற்போதைய வரட்சி நிலைமைகள் தொடர்ந்து நிலவுமாயின் விலைகள் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தும் வேளையில் பொருளாதார நடவடிக்கையில் குறிப்பாக வேளாண்மை மற்றும் வலு உருவாக்கத்தின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களைப் போன்றே விலைகள் மீதான வழங்கல்பக்க மோசமான தாக்கங்களுக்கு எதிராக உரிய நேரத்தில் வழிமுறைகளை எடுப்பதன் மூலம் பொதுமக்களின் மோசமான பணவீக்க எதிர்பார்ப்புக்களைத் தணிக்க முடியும்.

இதன்படி, பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பரந்தளவிற்கு நிறுத்தப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளில் தொடர்ச்சியாக, முன்கூட்டிய கலண்டர் அறிவிப்பிற்கிணங்க நாணயக் கொள்கைகளை அறிவிக்க விரும்புகிறோம். 2017இற்கான கலண்டர் கீழே தரப்படுகிறது.

**2017இல் நாணயக் கொள்கை அறிவிக்கப்படும் நாட்கள்**

| | |
|---|---|
| 1 | பெப்புருவரி 7, செவ்வாய்க்கிழமை |
| 2 | மாச்சு 24, வெள்ளிக்கிழமை |
| 3 | மே 9, செவ்வாய்க்கிழமை |
| 4 | யூன் 27, செவ்வாய்க்கிழம |
| 5 | ஓகத்து 3, வியாழக்கிழமை |
| 6 | செத்தெம்பர் 26, செவ்வாய்க்கிழமை |
| 7 | நவெம்பர் 7, செவ்வாய்க்கிழமை |
| 8 | திசெம்பர் 28, வியாழக்கிழமை |

# 4. 2017 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைக் கொள்கைகள்

மூலவளங்களின் வினைத்திறனுள்ள ஒதுக்கங்களுக்கும் அதன் மூலம் நாட்டின் வலுவான பொருளாதாரச் செயலாற்றத்திற்கு வசதியளிப்பதற்கும் நிதியியல் முறைமை முக்கியமானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, பொருளாதார வளர்ச்சி கூடியளவிற்கு நவீனத்துவம் வாய்ந்ததாக இருப்பதனால் **பரந்ததும் ஆழமானதும் திரவத்தன்மை மிக்கதுமான நிதியியல் முறைமை** இன்றியமையாததாகும்.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாடும் முக்கியமானதாகும். உறுதியான நிதியியல் முறைமையானது சேமிப்பவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் சாதகமான நம்பிக்கையான இயலுமைப்படுத்தும் சூழ்நிலையினை உருவாக்குகிறது; **நாணயக் கொள்கையின் பரிமாற்றத்திற்கு உதவுகிறது;** முதலீட்டினையும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் வினைத்திறன்மிக்க நிதியியல் இடை ஏற்பாடுகளை ஊக்குவிக்கிறது; அத்துடன் காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான சந்தைகளை ஊக்குவிக்கின்ற வேளையில் பொருளாதாரத்தின் மூலவள ஒதுக்குகளையும் மேம்படுத்துகின்றது.

நிதியியல் முறைமை உறுதிப்பாடு நிதியியல் முறைமையிலுள்ள பொதுமக்களின் நம்பிக்கையின் மீது காணப்பட்டதுடன், பல்வேறு உள்ளக மற்றும் வெளிவாரி அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற குறிப்பிட்ட இடர்நேர்வுகளைக் கூட்டாக எதிர்த்து நிற்கின்ற நிதியியல் முறைமையின் முக்கிய கூறுகளின் ஆற்றல்வாய்ந்ததும் தாக்குப்பிடிக்கக் கூடியதுமான முக்கிய கூறுகளில் தங்கியிருந்தது.

மத்திய வங்கி, நிதியியல் நிறுவனங்களின் அனைத்து முக்கிய வகைகளினதும் **ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை, ஆற்றல்வாய்ந்த மற்றும் பாதுகாப்பான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை உறுதிப்படுத்துதல் அதேபோன்று இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை** நிறுவுதல் மற்றும் நிதியியல் துறையில் சிறந்த கம்பனி ஆளுகை நியமங்களையும் நடைமுறைகளையும் புகுத்தும் அதேவேளையில் நிதியியல் வசதிகளை கிடைக்கச் செய்வதனை மேம்படுத்தல் என்பனவற்றினூடாக ஆற்றல்வாய்ந்த வினைத்திறன்மிக்க உறுதியான நிதியியல் முறைமையைப் பேணுவதற்கு எதிர்பார்க்கிறது.

நடுத்தர காலத்தில், எமது ஒட்டுமொத்த இலக்கு இத்துறையில் தோன்றுகின்ற பாதிக்கப்படக் கூடியதன்மையினை அடையாளம் காணுதல் நேரகாலத்துடன் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; மற்றும் நிதியியல் நிறுவனங்கள், சந்தைகளின் உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு விலை என்பனவற்றை மேலும் வலுப்படுத்துவதற்காகத் தொடர்ச்சியான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல் என்பனவற்றினூடாக நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதாகும்.

எமது நடுத்தர காலத் திட்டம் யாதெனில் எமது நாட்டின் பரந்தளவு பொருளாதார குறிக்கோள்களை எய்துவதற்காக வேளாண்மை, உட்கட்டமைப்பு, தயாரிப்பு குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் வர்த்தகம் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்துப் பொருளாதார துறைகளுக்குமான முழு வீச்சிலான நிதியியல் உற்பத்திகள் மற்றும் பணிகளை வழங்கும் நிதியியல் முறைமையொன்றைக் கொண்டிருப்பதேயாகும். புத்தாக்கம், உத்வேகம் மற்றும் போட்டித்தன்மைமிக்க நிதியியல் முறைமைகளின் தொலைநோக்குடன் கூடிய பரந்த நிதியியல் துறைக் கொள்கைகளை உள்ளடக்கிய நன்கு இடப்பட்டதும் **நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் சீர்திருத்தங்களைக் கொண்ட ஆர்வம்மிக்க** நிகழ்ச்சிநிரலொன்றினை நாம் கொண்டிருப்பது அவசியமாகும்.

முன்னுரிமை அடிப்படையில், உரிமம் பெற்ற வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களை உள்ளடக்கிய அனைத்து நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலுமான **ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை** வலுப்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம். இது வளர்ந்துவரும் வியாபாரச் சூழலில் எதிர்பாராத சவால்களை எதிர்கொள்வதற்கேற்ற விதத்தில் இந்நிறுவனங்களின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துவதன் மூலம் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை மேலும் உறுதிப்படுத்தும்.

இது தொடர்பில், மத்திய வங்கி 2017இலும் அதற்கு அப்பாலும் பின்வரும் கொள்கைகளை நடைமுறைப்படுத்த விரும்புகிறது.

**2006இல் தற்போதுள்ள வங்கித்தொழில் சட்டத்திற்குச்** செய்யப்பட்ட இறுதித் திருத்தங்களின் பின்னர் வங்கித்தொழில் துறையின் தோற்றப்பாடு உள்நாட்டு ரீதியாகவும் பன்னாட்டு

ரீதியாகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்குட்பட்டிருக்கிறது. இவ்வபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் சட்டங்களைத் தரமுயர்த்துவதற்கான தேவை பரிசீலனையில் கொள்ளப்படுகிறது. தற்போதுள்ள வங்கித்தொழில் சட்டத்திற்குத் திருத்தங்களை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். இதன்படி, உத்தேச **வங்கித்தொழில் திருத்தங்களினூடாக** ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்தவும் வலுப்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். சட்டம் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் என்பனவற்றை மீறுவதற்கான மத்திய வங்கியின் நடைமுறைப்படுத்தலுக்கான ஏற்பாடுகளைப் பரிசீலனையில் கொள்வோம். இது தொடர்பில் வங்கித்தொழில் துறையினரின் கருத்தினையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

இச்சீர்திருத்தங்களுடன் இசைந்த செல்லும் விதத்தில், நடுத்தர காலத்தில் அனைத்து முக்கிய ஒழுங்குவிதிகளையும் மீளாய்வு செய்ய எண்ணியுள்ளோம். இது தொடர்பில் பங்குச் சொத்துடமை, வெளிநாட்டுக் கடன்பாடுகள் மற்றும் கம்பனி ஆளுகை போன்ற **முக்கிய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை** மீளாய்வு செய்ய எண்ணியுள்ளதுடன் தேவையானவிடத்து இவை திருத்தப்படும்.

நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணும் பொருட்டும் ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களுக்கு இசையவும், மத்திய வங்கியின் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதன் தேவைப்பாட்டினை நாம் அடையாளம் கண்டிருக்கின்றோம். இதன்படி, வங்கியின் நீடித்துநிலைத்திருக்கும் இடர்நேர்வுச் சுட்டெண்ணின் அடிப்படையாகக் கொண்டு தனிப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வினைத்திறன், காத்திரமான தன்மை மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை என்பன மீது கவனத்தினைச் செலுத்தும் விதத்தில் **வங்கிப் பரீட்சிப்பு முறையியலை** உயர்த்துவதற்கு எதிர்பார்க்கிறோம். இதற்கமைய, வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை மற்றும் வங்கிகளின் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன மீதான கவனத்தினை அதிகரிப்பதற்காக **கலப்பு கணியம்சார் மற்றும் தரம்சார் குறிகாட்டிகளின்** அடிப்படையில் ஏற்கனவேயுள்ள இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. 2017இன் முதற் காலாண்டுப் பகுதியில் பெரிய வங்கிகளின் மீது இடர்நேர்வுச் சுட்டெண்ணின் முன்னோடி பரீட்சிப்புக்களை நடத்தவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து சுட்டெண் வங்கித்தொழில் துறையின் மற்றைய பிரிவுகளுக்கும் விரிவாக்கப்படும்.

2018இல் இடர்நேர்வுச் சுட்டெண் அனைத்துப் பரீட்சிப்பு அறிக்கைகளிலும் உள்ளடக்கப்படவுள்ளதுடன், இது சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்டு மேற்பார்வைத் தரமிடல்களையும் வழங்கவுள்ளோம். 2019இல் **அனைத்துமுள்ளடக்கிய இடர்நேர்விற்கு முன்னான** மதிப்பீடுகள் அனைத்து வங்கிகளுக்கும் நடத்தப்படவுள்ளதுடன் **இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்புத்** திட்டமும் வடிவமைக்கப்படவுள்ளது.

மேலும், மிகக் குறைந்த தேவைப்பாடுகள் பாசல் III மூலதன நியமங்கள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் **மூலதன நிலைமையினை** வலுப்படுத்த எண்ணுகிறோம். பாசல் III **மூலதன மற்றும் திரவத்தன்மை நியமங்களை** நடைமுறைப்படுத்துவது, உரிமம் பெற்ற வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு 2014 இற்கான வரைபடத்தில் முக்கிய கொள்கை வழிமுறைகளாக இனம் காணப்பட்டுள்ளன. பாசல் III **திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மீதான** பணிப்புரைகளை நாம் 2015 ஏப்பிறலில் ஏற்கனவே விடுத்துள்ளோம்.

2017 யூலை தொடக்கம் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்காக பாசல் III **குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்** மீதான பணிப்புரைகளை நாம் விடுத்திருப்பதுடன் பன்னாட்டு நேரத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் 2019 சனவரி 01ஆம் நாளன்று முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

மிகக் கூடியளவிற்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய வங்கித்தொழில் துறையினை உருவாக்குகின்ற நோக்குடன் வங்கிகள் உறுதியான நிதியிடல் தோற்றப்பாட்டினைப் பேண வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம். இதன்படி, வங்கிகளுக்காக நாம் **தேறிய உறுதியான நிதியிடல் விகிதத்தினையும்** வங்கிகளுக்கான **முடுக்கி வீதத்தினையும்** அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம். தேறிய உறுதியான நிதியிடல் விகிதம் 2018 சனவரி 01 அளவில் பிரயோகிக்கப்படவுள்ளதுடன் தேறிய உறுதியான நிதியிடல் வீதம் மீதான தேவையான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பன்னாட்டு நேர இசைவுகளுடன் விடுக்கப்படும். முடுக்கி வீதத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வங்கித்தொழில் முறையில் மிகையான முடுக்கி கட்டியெழுப்பப்படுவதனை மட்டுப்படுத்த எண்ணியுள்ளோம். இதன்படி, 2017இல் முடுக்கி விகிதத்தின் கீழ் இணங்குவிப்பு மட்டத்தினை கண்காணிக்க தொடங்குவோம்.

காத்திரமான மேற்பார்வைக்கான முன்நிபந்தனையொன்றாக **நெருக்கடிக்குத் தயாராக இருக்கும் திட்டம் மற்றும் மீட்பு மற்றும் தீர்மானக் கட்டமைப்பு என்பனவற்றை இறுதிப்படுத்துவது** எமது எண்ணமாக இருக்கிறது. இதன்படி, வங்கிகளின் மீட்சி மற்றும் தீர்மானக் கட்டமைப்பு மீது வழிகாட்டல்கள் விடுக்கப்படவுள்ளதுடன் பிரச்சனைகளுக்குள்ளாகியுள்ள வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல்

துறை முழுவதன் மீதுமான மோசமான தாக்கத்தினைக் குறைக்கும் பொருட்டு நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படும்.

வங்கித்தொழில் துறையில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திகள் மற்றும் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவிலிருந்தான வழிகாட்டல்கள் என்பனவற்றிற்கு இசைய, தற்போதைய மதிப்பீட்டுச் செயன்முறையினை வலுப்படுத்தவும் கணக்காய்வின் தரத்தினை உயர்த்தவும் பொருட்டு தகைமை பெற்ற கணக்காய்வுக் குழுவினைத் தெரிவு செய்வதற்காக ஏற்கனவேயுள்ள பிரமாணங்களையும் பொறிமுறைகளையும் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

அண்மைய ஆண்டுகளில் மத்திய வங்கி, வங்கியல்லா நிறுவனங்களின் இடர்நேர்வு முகாமைத்துவம், கம்பனி ஆளுகை, மூலதனப் போதுமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றைப் பலப்படுத்துவதற்காக பரந்த வீச்சிலான முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தியது. முன்னோக்கிச் செல்லும் அடிப்படையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை உயர்த்துவதன் மூலம் நிதியியல் துறையின் உறுதிப்பாடு வலுப்படுத்தப்படும்.

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மூலதன மட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் தற்போது நிலவுகின்ற தேவைப்பாடான முறையே ரூ.400 மில்லியன் மற்றும் ரூ.300 மில்லியனிலும் பார்க்கக் கூடுதலான குறைந்தபட்ச மைய மூலதனத்தினைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படவுள்ளன. இவை முறையே ரூ.2 பில்லியனுக்கும் ரூ.1 பில்லியனுக்கும் அதிகரிக்கப்படவுள்ளன. இது சுமுகமான மாற்றங்களுக்கு வழிவகுக்கும். இது அமைப்பியல் தாங்கிருப்பாகவும் தொழிற்படும். மேலும், இது ஏற்கனவேயுள்ள மூலதனப் போதுமை மீதான கட்டமைப்பினை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இது மிகக் கூடுதலான இடர்நேர்வு உணர்திறனைக் கொண்டதாக இருக்குமென்பதுடன் கடன்பாட்டாளர் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுகடன் இடர்வுகளின் மீதும் அதேபோன்று வர்த்தக ஏடுகளில் தொழிற்பாட்டு மற்றும் சந்தை இடர்நேர்வுகளின் மீதும் கவனத்தைக் கொண்டிருக்கும்.

மேலும், வங்கியல்லா நிதியியல் துறையின் ஆளுகைக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, தற்போதுள்ள கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளுக்குப் பொருத்தமான கொள்கை மாற்றங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பும் வலுப்படுத்தப்படும். ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் கணக்கீட்டு பெறுமதியிழப்பு என்பனவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை இணங்குவிக்கும் பொருட்டு புதிய கணக்கீட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வின் மீது ஏற்கனவேயுள்ள பணிப்புரைகளை நாம் திருத்தவுள்ளோம். நியாயமற்ற வெளிப்படுத்துகைகளைத் தணிக்கும் பொருட்டும் முதலீடுகள் மீதான உயர்ந்த குவிவு இடர்நேர்வுகளைக் குறைக்கும் பொருட்டும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளில் அசையாச் சொத்துக்களுக்கான மதிப்பீட்டிற்காக வழிகாட்டல்கள் வழங்கப்படும். மேலும், மேலதிகத் திரவத்தன்மை தாங்கிருப்பினை உருவாக்குவதற்காக துறைக்கான குறைந்தபட்சத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை மேலும் கடுமையாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்/ காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் மற்றும் காலாந்தரக் கூற்றுக்கள் என்பனவற்றைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடுதல் என்பனவற்றிற்காகப் புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதனூடாக வெளிப்படுத்துகைகளையும் வெளிப்படையான தன்மையினையும் உயர்த்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்.

பரவிச் செல்லக்கூடிய தாக்கங்களைத் தவிர்ப்பதற்காக ஒரு சில கம்பனிகளைக் கொண்ட ஆனால் வலுவான துறையொன்றைப் பேணுவதன் மூலம் நிதியியல் துறையின் ஒட்டுமொத்த இடர்நேர்வினைக் குறைப்பதே எமது குறிக்கோளாகும். எனவே, வங்கியல்லா நிதியியல் துறையினைப் பலப்படுத்தும் பொருட்டு ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு உத்தேச மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் கம்பனிகள் ஒன்றுடனொன்று இணைக்கப்படுவதனைத் தொடர்வதற்கு நாம் ஊக்குவிப்போம்.

மேலும், இணைத்தல் மற்றும் மீள்மூலதனமயப்படுத்தல் என்பனவற்றினூடாக இடர்ப்பாடுகளை நீக்குவதன் மூலம் இடர்ப்பாடுகளிலுள்ள நிதிக் கம்பனிகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு 2017இல் கவனம் செலுத்தப்படும். மோசடியான நடவடிக்கைகளும் தவறான நடைமுறைகளும் நிரூபிக்கப்படுமிடத்து பணிப்பாளர் சபைக்கும் மூத்த முகாமைத்துவத்தினருக்கெதிராக வழக்குகளைத் தொடர்வதற்கு நடைமுறைப்படுத்தல் பிரிவு ஒன்றினை நிறுவுவதற்கு நாம் எண்ணியிருக்கிறோம்.

தடைசெய்யப்பட்டுள்ள திட்டங்கள் மீது தற்போதுள்ள நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்குடன்

புலனாய்வுகள் தொடர்பான சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும் உதவிபுரியவுமென இத்துறையின் சட்டத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற, கணனிப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் தேர்ச்சி மற்றும் கணக்கீடு என்பனவற்றில் அனுபவம் கொண்ட அலுவலர்களை உள்ளடக்கிய பிரிவொன்றை நிறுவ எண்ணியுள்ளோம். இப்பிரிவு அங்கீகரிக்கப்படாத வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் தொடர்பான விடங்களையும் கையாளும். மேலும், மத்திய வங்கி அங்கீகரிக்கப்படாத முதலீட்டுத் திட்டங்களில் ஈடுபடும் அபாயம் பற்றி பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் அதிகளவில் விழிப்புணர்வூட்டும். மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்பது தொடர்பிலும் பொதுசன ஊடகங்களினூடாக காத்திரமான விழிப்புணர்வூட்டப்படும்.

அரச பிணையங்களின் வர்த்தகத்தில் **முதனிலை வணிகர்கள்** இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகின்றனர். மேலும் நாட்டில் பிணையங்கள் சந்தையை ஆழப்படுத்துவதற்கு உயர்ந்த வளங்கள் காணப்படுகின்றன. எனவே முதனிலை வணிகர்கள் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்படும் கொள்கைக் கட்டமைப்பினை நாம் கொண்டிருப்பது அவசியமானதாகும். இது அரச பிணையங்கள் சந்தையின் முதலீட்டுப் பாதுகாப்பினை மேலும் அதிகரிக்கும். இதற்கமைய, ஏற்கனவேயுள்ள **முதனிலை வணிகர்கள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை** மீளாய்வு செய்து, சந்தையில் காணப்படும் அண்மைக்கால அபிவிருத்திகளுக்கு இசைவாக முதனிலை வணிகர்களுக்கான பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவோம். **இடர்ப்பாட்டிலுள்ள முதனிலை வணிகர்களை மீளமைத்தல் பொறிமுறையொன்றினை** உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறோம்.

நிதியியல் துறையின், குறிப்பாக, முக்கியமான நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் அவற்றின் அபிவிருத்திகளை நெருக்கமான கவனிப்பு மத்திய வங்கியின் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் மூலம் வலுப்படுத்துப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பேரண்ட பொருளாதாரம் மற்றும் நிதியியல் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றினை உருவாக்க எண்ணியிருக்கிறோம். இத்தரவுச் சேகரிப்பு (1) மத்திய வங்கியின் தற்போதுள்ள பின்நெட் அறிக்கையிடல் முறைமையினை திருத்தியமைத்தல் (2) **அழுத்தப் பரீட்சிப்புக்களை** முக்கிய கவனத்தில் கொண்டு இடர்நேர்வுகள் மற்றும் **நிதியியல் நிறுவனங்களின் உள்ளக இணைப்புக்களிலிருந்து** நிதியியல் உறுதிப்பாட்டிற்கு தோற்றக்கூடிய **முறையியல் சார்ந்த பாதிக்கப்படக்கூடிய தன்மை மற்றும் அச்சுறுத்தலை** அடையாளம் காண்பதற்கு புள்ளிவிபரப் பகுப்பாய்வுகளை விரிவாக்குதல்; முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளையும் பாதிக்கப்படக்கூடிய தன்மையினையும் அடையாளம் காண்பதற்கும் கண்காணிப்பதற்கும் மதிப்பிடுவதற்குமான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு குறிகாட்டிகள் உட்பட நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் கட்டமைப்பினை மேம்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும் வளர்ந்துவரும் கொடுப்பனவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க விதத்தில் காத்திரமானதும் உறுதியானதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக அவற்றை வலுப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் வழிமுறைகளை மேற்கொள்ளும்.

இம்முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் ஆற்றும் விதத்தில் **குறைந்த காசில் தங்கியிருக்கும் சமூகமொன்றினை** உருவாகுவதற்காக இலத்திரனியல் கொடுப்பனவுகளை மேம்படுத்துவதற்காக **தேசிய கொடுப்பனவு முறைமையினை மேம்படுத்த** எதிர்பார்க்கிறோம். இது தொடர்பில் அரச கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு குறிப்பாக, இலங்கைச் சுங்கத்திற்கான கொடுப்பனவுகளை அதேநேர அடிப்படையில் **பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினூடாக** மேற்கொள்வதற்கேற்ற விதத்தில் கொடுப்பனவுத் தளம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. தற்பொழுது கிடைக்கத்தக்கதாகவுள்ள பன்னாட்டு அட்டைத் திட்டங்களுக்கு மாற்றாக செலவுச்சிக்கனமான **தேசிய அட்டைத் திட்டமொன்று** அறிமுகப்படுத்தப்பட்டு வருவதுடன் தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பனவு மற்றும் ஆழப்படுத்தல்களைக் கொண்ட கொடுப்பனவு அட்டைகளுக்கு வசதியளிப்பதற்காகப் **பொதுவான விற்பனை மைய ஆழியொன்று** அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன் செல்லிடப் பைகளிடையேயான இடைச்செருகல் தன்மைகளை உறுதிப்படுத்துவதற்காக **பொதுவான செல்லிட ஆழியொன்று** நடைமுறைப்படுத்தப்படும். மேலும், இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளின் வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டும் அத்தகைய கொடுப்பனவு முறைகளுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்குமாக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினை இணைப்பதன் மூலம் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் முன்னேற்றத்தினை நாம் கண்காணிப்போம்.

முன்னோக்கிச் செல்லும் விதத்தில், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக உரிமம் பெற்ற கொடுப்பனவு அட்டைப் பணி வழங்குவோர் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு

முறைமைகளினது மேற்பார்வைக் கட்டமைப்பும் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயுமான கண்காணிப்புக்களும் வலுப்படுத்தப்படும். இணையத்தளக் கொடுப்பனவுகளின் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்காக **இணையத்தள வங்கித்தொழில் வழிகாட்டல்களை** அறிமுகப்படுத்தவும் எண்ணியுள்ளோம்.

2016ஆம் ஆண்டில், மத்திய வங்கி, அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட **பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுதலை ஒழித்தல் மீதான தேசிய கொள்கையினைப்** பின்பற்றியது. தற்பொழுது நிதியியல் நிறுவனங்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பில் தமது சொந்தச் செயன்முறைகளை அபிவிருத்தி செய்து வருகின்றன.

நாட்டின் தரமிடலை உயர்த்தும் நோக்குடன் **நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின்** விதந்துரைப்புக்களைக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவது இலங்கைக்குத் தேவையாகவுள்ளது. இணங்குவிப்புக்களில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை அடைய இலங்கை தவறுமாயின், நாடு உயர் இடர்நேர்வினைக் கொண்ட நாடாகக் கருதப்பட்டு நிதியியல் துறையில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்திவிடும்.

அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கும் அதன் மூலம் இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்தும் பொருட்டும் நடுத்தர காலத்தில் மத்திய வங்கி பல உபாய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்.

**நுண்பாக நிதிச் சட்டம்** 2016 யூலை 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளமை பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். இதனுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியில் **நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது.** இது 2006ஆம் ஆண்டின் நுண்பாக நிதிச் சட்டத்தில் (நுண்பாக நிதிச் சட்டம்) குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களை மேற்கொள்வதுடன் சிறந்த ஆளுகை, வெளிப்படையான தன்மை மற்றும் நுண்பாக நிதி நிறுவனங்களின் உறுதிப்பாடு என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்.

மத்திய வங்கி தகைமையுடைய கம்பனிகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஏற்கனவே பெற்றிருக்கிறது. இவை நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் தொடர்பான கண்காணிப்பினையும் தலத்திலான பரீட்சிப்புக்களையும் மத்திய வங்கி தொடர்ச்சியாக மேற்கொள்ளும் உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்தவும் ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்கவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

நிதியியல் துறைக்கான கொள்கைகளையும் திட்டங்களையும் நாம் முன்மொழிகின்ற வேளையில் பொருளாதாரத்திலுள்ள உச்ச நிதியியல் நிறுவனமென்ற ரீதியில் எமது சொந்த நிறுவனத்தின் உறுதிப்பாடு, தடங்கலற்ற தன்மை மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தும் தேவை எமக்குள்ளது. குறிப்பாக, மத்திய வங்கிகள் பொதுச் சொத்துக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் எனக் கருதப்படுவதனால் மத்திய வங்கியில் **இடர்நேர்வு கலாச்சாரமொன்றினைப்** பேணி வளர்ப்பது முக்கியம் வாய்ந்ததொன்றாகும்.

இம்முயற்சியுடன் ஒத்துச்செல்லும் விதத்தில், இலங்கை மத்திய வங்கி "மூன்றடுத்துப் பாதுகாப்பு" இடர்நேர்வு முகாமைத்துவ மாதிரியினைத் தொடர்ந்தும் பிரயோகிக்கத்தக்க எண்ணியுள்ளது. இதில் தொழிற்பாட்டு முகாமையாளர்கள் முதலாவது கட்டப் பாதுகாப்பினை உருவாக்குவதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளக கணக்குத் திணைக்களம் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டப் பாதுகாப்புக்களைக் கொண்டிருக்கின்றன.

மேலும், முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகளுடனான சமச்சீரான பெறுபேற்றுக் குறிக்கோளினைக் கொண்ட அரச மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினைக் கட்டியெழுப்புவதற்கான தேவையினை கருத்திற் கொண்டு மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும், பன்னாட்டு ஒதுக்குகளுக்கான **உபாயச் சொத்து ஒதுக்கீட்டு** கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதுடன், இதனுடன் இசைந்து செல்லும் விதத்தில் **புதிய முதலீட்டு கொள்கைக் கூற்றும்** தயாரிக்கப்பட்டது. திருத்தப்பட்ட முதலீட்டுப் பிரமாணத்தினை பிரதிபலிக்கும் விதத்தில் முதலீட்டு வழிகாட்டல்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

முன்னோக்கிச் செல்கையில், மத்திய வங்கிக்குப் பொருத்தமான **தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை** உறுதிப்படுத்த எதிர்பார்ப்பதுடன் புதிய இடர்நேர்வு அரசாங்க அமைப்பினை ஏற்படுத்தவும்; வங்கியின் நிதியியல் இடர்நேர்வினை கண்காணிப்பதற்காக முறைமைகளையும் நடவடிக்கை முறைகளையும் அபிவிருத்தி செய்யவும்; மத்திய வங்கிக்காக அனைத்துத் திணைக்களங்களினதும் **இடர்நேர்வு திட்டமிடல்களில்** ஈடுபடுவதன் மூலமாக நிதியல்லா இடர்நேர்வுகளைக் கண்காணிக்கவும் **இடர்நேர்வு ஆர்வக் கட்டமைப்பினை** விருத்தி செய்யவும் நாம் எண்ணியுள்ளோம்.

# 5. பரந்த பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

***நாணய முகாமைத்துவம்:*** எவ்வித பற்றாக்குறைகளுமின்றி பொதுமக்களின் தேவைக்கேற்ப இலங்கை நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் கிடைப்பனவை உறுதிப்படுத்துவது எமக்கு அவசியமாகும். அதனை உறுதிப்படுத்துவதற்காக, நாணயக் குத்திகள் பற்றாக்குறையாகவுள்ள பகுதிகளில் **எதிர்பாராத நிகழ்வுகளுக்கான நிலவறை ஒழுங்குகளை** ஒழுங்கு செய்ய எண்ணியுள்ளோம். நாடு முழுவதற்குமான **நாணயக் குத்திகளின் விநியோகத்திற்காக புதிய பொறிமுறையொன்றினை அபிவிருத்தி செய்யவும்** பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட உண்டியல்களின் குத்திகளைச் சேகரிக்க வங்கிகளுடன் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்யவும் திட்டமிட்டுள்ளோம்.

2017இல் நாணய வார்ப்புச் செலவினைக் குறைப்பதற்காக, புதிய நாணயக் குத்தித் தொடர்களை வெளியிடுவதற்கு மத்திய வங்கித் திட்டமிட்டுள்ளது. மேலும், மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்களின் தரநியமங்களைப் பேணுவதற்கான வழிமுறைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களைப் போன்றே, மத்திய வங்கியின் நாணய முகாமைத்துவக் கொள்கை **தரநியமங்களைப் பேணுவதன் மீது கவனத்தினைச் செலுத்தும்.** இதற்கமைய, இலங்கைப் பொருளாதாரத்தின் தோற்றம் பெற்றுவரும் நன்மதிப்பினைப் பிரதிபலிக்கும் விதத்தில், சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு நாணயத் தாள்களை வேண்டுமென்றே சேதப்படுத்தும் மற்றும் அத்துடன் சிதைக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் நாணயச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

***ஊழியர் சேம நிதியத்தின் முகாமைத்துவம்:*** நாட்டின் மிக மிகப் பாரிய நிதியமாக விளங்கும் ஊழியர் சேம நிதியம் ரூ.1.8 றில்லியனை மொத்தச் சொத்தாகக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் நாம் பல முன்னெடுப்புக்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். இவை **பிம்ப ஸ்கானிங் செயற்றிட்டத்தின்** கட்டம் 1 நிறைவு செய்யப்பட்டமை மற்றும் **குறிப்பிட்ட தொழிற்பாடுகளைத் தன்னியக்கப்படுத்தல்** என்பனவற்றினை உள்ளடக்கியுள்ளது. முன்னோக்கிச் செல்கையில், மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஊ.சே. நிதியப் பிரிவுகளினூடாக பிரதேச மட்டங்களுக்கு பல்வேறு பணிகளையும் விரிவாக்குவதன் மூலம் ஊ.சே. நிதியத் தொழிற்பாடுகளை வலுப்படுத்த எண்ணியுள்ளோம். தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஆலோசனையுடன் புதிய கைரேகையுடன் கூடிய தேசிய அடையாள அட்டையுடன் அனைத்து அலுவலர்களையும் மீளப் பதிவுசெய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துச்செல்லும் விதத்தில், பன்னாட்டு சிறந்த நடைமுறைகளை உள்ளடக்குதல், சொத்துக்களின் பொருத்தமான பன்முகப்படுத்தலின் மீது கவனம் செலுத்துதல் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் உதவியுடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேற்கொள்ளுதல் என்பனவற்றின் மூலம் **முதலீட்டுக் கொள்கை மீளாய்வினை** நாம் செயற்படுத்தி வருகிறோம்.

முன்னோக்கிச் செல்கையில், ஊ.சே.நிதியம் இனிவரும் ஆண்டுகளில் பின்வரும் விடயங்களில் முக்கிய கவனத்தினைச் செலுத்தும்.

- தொழில்தருநர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களை இணைக்கும் விதத்தில் **வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும்.**
- ஏற்கனவேயுள்ள தரவுத் தளத்தின் தரத்தினை உயர்த்துதல்
- மீளளிப்புக் கொடுப்பனவு முறைமைகளின் வினைத்திறனை மேம்படுத்துதல்
- பணிவழங்கலின் மட்டத்தினை மேம்படுத்துவதற்காக ஊ.சே. நிதியத்தின் தொழிற்பாடுகள் தொடர்பில் ஆர்வலர்களிடையே விழிப்புணர்வினை மேம்படுத்துதல்
- தொழில்தருநர், ஊழியர் இருவருக்காகவும் **இ-கணக்குகளைத் நிறுவுதல்**
- வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட சேகரிப்புக்களையும் உறுப்பினர் கணக்குகளில் அதேநேர அடிப்படையில் செல்லுபடியாகச் செய்யக்கூடிய விதத்தில் தொழில்தருநர்களுக்கு பங்களிப்பு கொடுப்பனவு முறைமை வசதியையும் அறிமுகப்படுத்தல்
- முதலீடுகளுக்காகவும் மற்றும் உயர்ந்தமட்ட இடர்நேர்வு சீராக்க வருவாய்களை உருவாக்குவதற்கான பொருத்தமான

சொத்து ஒதுக்குகளைப் பேணுவதற்காகவும் **புதிய சந்தைகள் மற்றும் சொத்து வகுப்புக்களை அடையாளம் காணுதல்**

- **காத்திரமானதும் வினைத்திறன் மிக்கதுமான நிதிய** முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக நிறுவன ரீதியான இயலளவை உயர்த்துதல்
- **நிதியியல் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்காக** கட்டமைப்பினை மேம்படுத்துதல்

***பொதுப்படுகடன் முகாமைத்துவம்:*** நீங்கள் அறிந்தவாறு மத்திய வங்கி அரசாங்கத்தின் சார்பில் பொதுப்படுகடனை முகாமைப்படுத்தி வருகின்றது. இப்பொறுப்பினை ஆற்றுகையில், எமது படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் உயர்ந்த நேர்மையுடனும் தொழில்சார் நிபுணத்துவ வழிமுறையிலும் நடத்தப்படுவதனை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பின்னணியில், நாணயச் சபை, படுகடன் சந்தை மற்றும் படுகடன் முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைப் பட்டியலொன்றினை உருவாக்கியுள்ளது. அத்தகைய சந்தைத் தகவல்களின் கிடைப்பனவு வெளிப்படைத் தன்மையினை அதிகரிக்குமென நாம் நம்புகிறோம்.

காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும் ஆண்டு நடவடிக்கைக் கலண்டரின்படி நாங்கள் தொழிற்படுகின்றோம்.

நிதி அமைச்சின் ஒத்துழைப்புடனான தகவல்கள் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். இது அரச பிணையங்கள் சந்தையில் முதலாந்தர ஏலச் செயன்முறைகளின் வெளிப்படைத் தன்மையினையும் ஊகத்தன்மையினையும் உயர்த்தும். அத்தகைய முன்னெடுப்புக்கள் அனைத்து சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் அதே தகவல்களை வழங்குமென்பதனால் இது சாத்தியமான கொடுக்கல்வாங்கல்களின் மீதான தகவல்களை முன்கூட்டியே கிடைப்பதனை உறுதிப்படுத்தும்.

மேலும், எமது தொழிற்பாடுகளின் வெளிப்படையான தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் 2016 யூனிலிருந்து, மத்திய வங்கி முன்வைக்கப்பட்ட தொகையிலும் பார்க்க குறைந்த தொகையினை ஏற்றுக்கொள்கின்ற போதும் **முன்வைக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் கூடுதலான தொகையினை ஏலத்தில் ஏற்றுக்கொள்வதில்லை என்ற தீர்மானம்** எடுக்கப்பட்டிருக்கிறது.

அரச பிணையங்களின் வர்த்தகப்படுத்தலுக்காக புளும்போர்க்க வர்த்தகப்படுத்தல் தளம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. முறைமையின் விலைகளைப் பெருமளவில் கண்டறிதல் மற்றும் வெளிப்படையானதன்மை அதேபோன்று அதிகரித்த நம்பிக்கை என்பன இரண்டாந்தரச் சந்தையில் தளத்தின் மீதான வர்த்தகத்தின் அளவினை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளன.

மேலும், புளும்போர்க் **இ-வர்த்தப்படுத்தல் தளம்** மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் விரிவாக்கப்படவுள்ளதுடன் இருவழி விலைக்குறிப்பீடுகள் கட்டாயமாக்கப்படும். இது சந்தைக்கான விலை வழிகாட்டல் அதிகரித்து விலை கண்டறிதல் மற்றும் வெளிப்படையானதன்மை காரணமாக திரவத்தன்மையினையும் அதிகரிக்கும்.

வெளிப்படையானதன்மை மற்றும் நடவடிக்கை முறைகளின் தரப்படுத்தல்கள் என்பனவற்றை மேம்படுத்தும் பொருட்டு அரச பிணையங்களுக்கான **முதலாந்தர ஏலங்களில் விதிகளும்** பிரசுரிக்கப்படும்.

அதேவேளை, ஏல விதிகளின் புதிய தொகுதியொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன் இச்செயன்முறையின் வரைவு உலக வங்கியுடனும் ப.நா. நிதியத்துடனும் பகிரப்பட்டுள்ளன. வரைவு ஏல முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் பன்னாட்டு அமைப்புக்களின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. நாம் இதனை 2017இன் முதலாம் காலாண்டில் இதனை செய்யலாமென எதிர்பார்க்கிறது. ஏல நடைமுறைகள், காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் படுகடன் முகாமைத்துவ உபாயம் அதேபோன்று அரச பிணையங்களுக்காக சிறந்த தரவுத் தளமொன்றினை நிறுவுதல் உட்பட பல துறைகளில் ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஐக்கிய அமெரிக்க திறைசேரியிலிருந்து ஆலோசனையாளரொருவரை அழைக்க இருக்கின்றோம்.

திரவத்தன்மை முகாமைத்துவ முன்னெடுப்புக்களின் ஒரு பகுதியாக விளங்கும் மீண்டும் வாங்குதல், ஆழி மற்றும் பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள் போன்ற தீவிர படுகடன் முகாமைத்துவ முன்னெடுப்புக்களின் சாத்தியத்தன்மைகள் தொடர்பான சட்டவாக்கங்களின் மாற்றங்களுடன் அரச படுகடன் சொத்துப்பட்டியலை மேம்படுத்தும் வழிவகைகள் கண்டறியப்படும்.

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான இரண்டாந்தரச் சந்தையை ஆழப்படுத்தி அகலப்படுத்துவதற்குத் தேவைப்படும் சட்ட சீர்திருத்தங்களுடன் சேர்த்து மத்திய வங்கி அரச பிணையங்களுக்காக இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளம் மற்றும் மத்திய இணைத்தரப்பினரை நிறுவவுள்ளது. இதேபோன்று, முன்மொழியப்பட்டுள்ள இ-வர்த்தகப்படுத்தல் தளம் மற்றும் தீர்வகம் என்பனவற்றினூடாக படுகடன்

சாதனங்கள் மீதான இரண்டாந்தரச் சந்தைத் தகவல்களைப் பரப்பும் பொறிமுறையொன்று நிறுவப்படவுள்ளது. எனவே, அண்மைக் காலத்தில் இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களுக்கான தொழிற்பாட்டுச் செயன்முறைகளின் புதிய தொடர் ஒன்றினை நாம் கொண்டிருப்போம்.

திறைசேரி, ஐ.அ.டொலருக்கான மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்பாடுகளுக்கான திரவ முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்களை ஆராய்கின்ற செயன்முறைகளை ஏற்கனவே தொடங்கியிருக்கிறது. இச்செயன்முறை தொடர்பில் மத்திய வங்கி திறைசேரியுடன் நெருங்கிச் செயற்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட மூலவளக் கிடைப்பனவின் காரணமாக தேவையற்ற உள்நாட்டுச் சந்தை அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கான சந்தை தாங்கிருப்புக்களை கட்டியெழுப்புவதற்கு சந்தை நிலைமைகள் இலங்கைக்குச் சாதகமாக இருக்கும் பொழுது நாம் பன்னாட்டு மூலதனச் சந்தையினை அணுகுதல் வேண்டும். இது வெளிநாட்டு முதலீட்டாளர் தளத்தினை விரிவாக்கி பன்முகப்படுத்தும் சில பாரிய பன்னாட்டு முதலீட்டாளர்களிடையே நாணயம் தொடர்பான நம்பிக்கை வளர்ந்து வருவதனை நாம் கண்டிருக்கின்றோம். இதன் கருத்து யாதெனில் அண்மைய எதிர்காலத்தில் நாம் ரூபாவில் பன்னாட்டு முறிகளை வழங்கக்கூடியவர்களாக இருப்போம் என்பதே. இது வெளிநாட்டுச் செலாவணி அசைவுளக்கான எமது இடர்நேர்வு வெளிப்படுதம்துகைகளைக் குறைக்கும். இம்முயற்சியில் நாம் எதிர்காலத்தில் யூரோ கிளியர் முறைமையில் எமது முறிகளை வர்த்தகப்படுத்த வசதியளிக்கும் விதத்தில் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவோம், அத்தகைய முன்முயற்சிகள் முதலீட்டாளர்களுக்கான தீர்ப்பனவின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் அதிகரிக்குமென்பதுடன் உள்நாட்டுச் சந்தையில் முதலீடு செய்வதற்கு கிடைக்கத்தக்கதாக இருக்கும் சேமிப்புத் தொகுதியை அதிகரிக்கும்.

புதிய **பொதுப்படுகடன் சட்டம்** ஏற்படுத்தப்படவுள்ளதுடன் தொழில்சார் நிபுணத்துவக் குழுவொன்று படுகடன் முகாமைத்துவம் தொடர்பான அனைத்துச் சட்டங்களையும் பரிசீலனை செய்துவருவதுடன் **தனியான படுகடன் முகாமைத்துவப் பிரிவொன்று** நிதி அமைச்சில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

எங்கள் நோக்கில் இது ஒரு சாதகமான அபிவிருத்தியாகும். ஏனெனில் இப்பொழுது பல ஆண்டுகளாக, சுதந்திரமான நாணயக் கொள்கையினை நடத்துவதற்கான முயற்சிகளில் அக்கறைகளின் முரண்பாடுகளுக்கு ஈடுகொடுக்க வேண்டியதாக இருந்த வேளையில், சாத்தியமானளவிற்கு மலிவான முறையில் நிதிகளைத் திரட்டி வருகிறது. இவ்வக்கறைகளின் முரண்பாடு மற்றைய ஒவ்வொன்றுடனும் முரண்படுவதுடன் **மத்திய வங்கியின் நாணயக் கொள்கையை நடத்துவதிலும் சவால்களை ஏற்படுத்துகிறது.** எனவே படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் வெளியே எடுத்துச் செல்வது சுயாதீனமான நாணயக் கொள்கையினை நடத்துவதற்குத் தேவையான மனித வலுவினையும் தேர்ச்சியையும் மத்திய வங்கி கொண்டிருப்பதனை இயலுமைப்படுத்தும்.

***வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்:*** வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் தளர்த்தும் நோக்குடன், மத்திய வங்கி கடந்த அண்மைக் காலத்தில் பல புதிய கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. எமது அனைத்துக் கொள்கை வழிமுறைகளும் உலகளாவிய வியாபார நடவடிக்கைகளில் இலங்கையின் போட்டித்தன்மையுள்ள அநுகூலங்களை மேம்படுத்துவதற்கான நடைமுறைக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்வதாக இருப்பதனை நாம் இங்கு வலியுறுத்தல் வேண்டும். இது முதலீட்டாளர் நம்பிக்கையினை அதிகரிக்கச் செய்து, வெளிநாட்டு ஒதுக்குகளை வலுப்படுத்தி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை சமநிலைப்படுத்தும்.

புதிய வெளிநாட்டுச் சட்டமொன்றினைக் கொண்டிருக்க வேண்டிய சரியான நேரம் இதுவேயென அரசாங்கம் அடையாளம் கண்டிருக்கிறது. 2017 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு புதிய வெளிநாட்டுச் செலாவணி மசோதா 2017இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் தளர்த்தும் செயன்முறையில் மத்திய வங்கி ஈடுபட்டிருக்கிறது.

***பிரதேச அபிவிருத்தி:*** இலங்கை அரசாங்கத்தின் முகவர் என்ற ரீதியில் மத்திய வங்கி, வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல், நிதியியல் அறிவினை உயர்த்துதல் அதேபோன்று நிதியியல் வசதிகளை கிடைப்பனவு செய்தல் மற்றும் சமச்சீரான பிரதேச வளர்ச்சி மற்றும் சமமான அபிவிருத்தி என்பனவற்றை அடையும் நோக்கடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக சலுகை ரீதியான அபிவிருத்தி கொடுகடன் திட்டங்கள் பலவற்றையும் அபிவிருத்தி செய்து வருகிறது.

- *நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான புதிய கடன் திட்டம்:* நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான புதிய கடன் திட்டமொன்று இலங்கை மத்திய வங்கியினாலும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினாலும் கூட்டாக வடிவமைக்கப்பட்டது. இது

நிதியியல், தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்முயற்சியாண்மையாளர்களுக்குக் குறிப்பாக இளம் பட்டதாரிகள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் தேவைகள் என்பனவற்றை வலியுறுத்துகின்ற அரசினால் வழிநடத்தப்படும் ஆதரவுப் பொறிமுறையினை உள்ளடக்கியிருக்கிறது. திட்டத்தின் தனித்துவமான பண்பு யாதெனில் ஆரம்பச் செலவுகளை ஈடுசெய்வதற்கு தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான விசேட கொடை மூலங்களை உள்ளடக்குவதாகும். கொடையின் உயர்ந்தபட்சத் தொகை ரூ.50,000 ஆக இருப்பதுடன் உயர்ந்தபட்சக் கடன் தொகையாக ஆண்டிற்கு 5.5 சதவீத வட்டியுடன் ரூ.250,000 வழங்கப்படும். பொருளாதாரத்தின் தேவையான துறைகளுக்கு ரூ.40,000 மில்லியனை ஒதுக்கீடு செய்ய எண்ணியுள்ள இத்திட்டம் 2017 சனவரியில் தொடங்கப்படும்.

- *நிதியியல் வசதிகளை கிடைக்கச் செய்வதற்கான தேசிய உபாயம்:* நிதியியல் கிடைப்பனவு வசதியின் அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையாகக் கொண்டு நிதியியல் வசதிகளின் கிடைப்பனவற்கான தேசிய உபாயத்தின் அனைத்தையுமுள்ளடக்கிய வரைவு, அயல் நாடுகளின் சமகால தேசிய நிதியியல் கிடைப்பனவு வசதிகளினைப் பரிசீலனையில் கொண்டு அபிவிருத்தி செய்யப்படும். தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் மூலம் பெறப்படும் உள்நாட்டு ஆர்வலர்களின் கருத்துக்கள் உத்தேச தேசிய உபாயங்களை வரையும் போது பரிசீலனைக்கெடுக்கப்படும்.

- *வர்த்தகளவுகளைக் கொண்ட சேதன வேளாண்மை மற்றும் பாற்பண்ணை தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல்:* சேதன வேளாண்மையாளரிலிருந்து கிடைக்கும் பல்வேறு நன்மைகளினதும் முக்கிய காரணமாக, சேதன வேளாண்மை மீதான பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்தில் சேதன வேளாண்மை மீதான அதிகரித்த கரிசனைகள் வலியுறுத்தப்படுகின்றன. மத்திய வங்கி **முறைசார்ந்த வேளாண்மைச் சட்டங்கள்** மற்றும் **பல் ஆர்வலர் தொழில்முயற்சிகளை நிறுவுவதன் மூலமாக** வர்த்தகளவிலான சேதன வேளாண்மையினையும் பண்ணை தொழில்முயற்சியாளர்களையும் ஊக்குவிக்க மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

- *வீடுகளின் மேல் கூரையில் பொருத்தப்படும் சூரிய வலு உருவாக்கத்தினை மேம்படுத்துவதற்கான கடன் திட்டம்:* நாட்டில் வீட்டின் மேல் கூரையில் பொருத்தப்படும் சூரிய வலு உருவாக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இப்புதிய கடன் திட்டங்கள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சு நீடித்துநிலைத்திருக்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும்.

- *பசுமை நிதியிடலை மேம்படுத்துதுல்:* மேலும் சூழலைப் பாதுகாப்பதற்காக தொழில்முயற்சிகளை ஊக்கவிப்பதற்காக விழிப்புணர்வினை அதிகரித்தல், மூலவளங்களை பாதுகாத்தல் மற்றும் காபன் நடு நிலையாக்கலை அடைதல் என்பனவற்றினூடாக மத்திய வங்கி பசுமை நிதியிடலை ஊக்குவிக்கும். சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் பசுமைத் தொழில்முயற்சிகளுக்கு நிதியியல் வசதிகளை வழங்குவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்படும்.

பசுமை நிதியிடலை ஊக்குவிக்கும் பன்னாட்டு ஆர்வலர்களுடன் இசைந்து செல்லும் விதத்தில், மத்திய வங்கியும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் நீடித்துநிலைத்திருக்கும் வங்கித்தொழில் வலையமைப்புடன் இணைந்திருக்கிறது. இது நீடித்துநிலைத்திருக்கும் நிதியின் மீதான தோற்றம் பெற்றுவரும் சந்தைகளின் நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் வங்கித்தொழில் சங்கங்கள் என்பனவற்றிற்கான அறிவு மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்பும் தளமாக விளங்குகின்றது. நீடித்துநிலைத்திருக்கும் வலையமைப்பின் உறுப்பினர் என்ற ரீதியில் வங்கிகள் அவை நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் சூழலையும் சமூக இடர்நேர்வுகளையும் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்கு அவ்வங்கிகளுக்கு உதவுவதற்கான நீடித்துநிலைத்திருக்கும் வங்கித்தொழில் நடைமுறைகளின் மீது நாம் கவனத்தினைச் செலுத்துவதுடன் பசுமைத்தன்மைகள் கொண்ட, காலநிலை சிநேகபூர்வத்தன்மை மற்றும் சமூக வசதிகளின் கிடைப்பனவு என்பனவற்றைக் கொண்ட வியாபாரங்களுக்கும் ஆதரவளிக்கும். பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன், நீடித்துநிலைதிருக்கும் நிதி தொடர்பான முக்கியமானதொரு நடவடிக்கையாக 2017இன் முதற் காலாண்டுப் பகுதியில் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களின் மூத்த அலுவலர்களுக்காக செயலமர்வுகளை நடத்துவதற்கு எண்ணியுள்ளோம்.

# 6. முடிவுரைக் குறிப்புக்கள்

சீமாட்டிகளே, கனவான்களே

இவ்வழிகாட்டலில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் கொள்கைகளும் தோற்றப்பாடுகளும் எதிர்காலத்தில் உங்கள் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதிலும் தொடர்பான கொள்கைகளை வடிவமைப்பதிலும் ஒரு ஊக்கியாக விளங்கும். அதேநேரம் பொருளாதாரம் மற்றும் எதிர்பாராது ஏற்படும் தேவைப்பாடுகளினைப் பொறுத்து புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாம் தயங்கமாட்டோம் என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றோம். அத்தகைய முன்னெடுப்புக்கள் தேவையான ஆலோசனைகளுடனும் ஆர்வலர்களுக்குத் தெளிவாக அறிவிக்கப்பட்டதன் பின்னரே மேற்கொள்ளப்படும்.

இப்பொழுது சில முக்கிய அம்சங்கள் பற்றியும் வலியுறுத்துவதுடன் இவ்வறிக்கையினை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேம்பட்டுவரும் பேரண்ட அடிப்படைகளில் தெளிவாகக் காணப்படுகின்றவாறு பொருளாதாரத்தின் உறுதிப்பாடு பரந்தளவில் இடம்பெற்று வருவது தெளிவானவொன்றாகும். நாணய அதிகாரசபை மற்றும் இலங்கையின் நிதியியல் அமைப்பின் உச்ச ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில், நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் **உறுதியான பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக எமது மிகச் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.**

இக்கொள்கைகளில் சில, குறுங்காலத்தில் வரிகளை ஏற்படுத்துவனவாக நோக்கப்படுகின்றன. எனினும், அவை நடுத்தரல காலத்தில் பொருளாதார உறுதிப்பாடு **வலுப்படுத்துவதனை** நிரூபிக்கின்றன. இது இலங்கையினர் அனைவரினதும் நீண்ட கால சுபீட்சத்திற்கு மிக இன்றியமையாததாகும்.

உறுதிப்பாட்டிற்கான முகவரொருவர் என்ற ரீதியில், மத்திய வங்கி நாட்டின் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகத் **தெளிவானதும் முரண்பாடற்றதுமான கொள்கைகளினூடாக** அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றும். தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் கட்டமைப்புக்கள் இதற்கு ஆதரவளிப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும்.

நாட்டின் பொருளாதார செயலாற்றம் தொடர்பான எமது பங்களிப்பு முக்கியமாக வசதியளிப்பவர் என்பதாகும். வசதிப்படுத்துநர் என்ற முறையில், தனியார் துறையின் பங்களிப்பினை முக்கியத்துவப்படுத்தும் அரசாங்கத்தின் புதிய வளர்ச்சி மாதிரிகளுக்கு நாம் தொடர்ந்தும் ஆதரவளிப்போம்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்குமான விதத்தில் **அரசாங்கத்தின் ஒட்டுமொத்த பலத்திற்கு** ஆதரவளிப்பதனை எமது கொள்கைகள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இதனை அடையும் விதத்தில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கு எமது முயற்சிகளினூடாக பங்களிப்பதுடன் வர்த்தகத்திற்கும் வசதியளிப்போம். இதன் மூலம் முதலீடு - வர்த்தக தொடர்புகளின் நன்மைகளைப் பயன்படுத்துவதற்கேற்ற நிலைமைகளை உருவாக்குவோம்.

இப்பின்னணியில், **நாட்டின் கணிசமான உள்ளார்ந்த வளத்தினை பயன்படுத்துவதற்கான** ஆரம்பத் தூண்டுதல் குறிப்பாக அடுத்த ஆண்டில் அல்லது இரண்டாண்டில் உள்நாட்டு தனியார் துறையிலிருந்து வருதல் வேண்டும். **பாரிய பெருநகர் அபிவிருத்திச் செயற்றிட்டம்** அதேபோன்று அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் கண்டி என்பனவற்றின் அபிவிருத்திக்காக அராசங்கத்தினால் வரையப்பட்ட **முதன்மைத் திட்டங்கள்** மற்றும் பல்வேறு பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் **உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆகிய இருபகுதியினருக்கும் பாரிய முதலீட்டு வாய்ப்புக்களை திறந்துவிடும்.**

நாட்டின் ஒட்டுமொத்த வறுமையைக் குறைப்பதில் இதுவரை முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ள போதும் ஒட்டுமொத்த அபிவிருத்தி உத்வேகம் நடைமுறையிலுள்ள வேளையில் மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் காணப்படும் பசுமை நிகழ்வகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இது விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசரத்தினைக் கவனத்தில் கொண்டு **நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்களுடன்** இசைந்த செல்லும் விதத்தில் இலங்கையிலிருந்து அனைத்து வடிவங்களிலும் காணப்படும் வறுமையை ஒழிப்பதற்காக அரசாங்கம் 2017இனை **"வறுமை ஒழிப்பு ஆண்டு"** ஆகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

முன்னுரிமை அடிப்படையில், **ஒப்புரவானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான** வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும். இக்குறிக்கோளினை அடைவதற்கான திறவுகோல் இதுவாகும். எனவே இம்முயற்சிகளைப் பூரணப்படுத்துவதற்காக மத்திய வங்கி பிரதேச அபிவிருத்தியில் அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் பேணிவரும். ஊக்குவிப்பு

விடயங்களை கிடைக்கச் செய்வதற்கான ஒரு வழிமுறையாக நிதியியல் அளவினை உயர்த்துவதன் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

அரசாங்கம் **மத்திய வங்கியினை மீளமைப்புச் செய்வதற்கான** விருப்பத்தினை அறிவித்திருப்பது பற்றி நாம் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். செறிவான மீளமைத்தில் செயன்முறையினை நாம் வெகுவாக வரவேற்கிறோம். இது, செயன்முறைகளைத் தரமுயர்த்தி நாணயச் சட்ட விதி மற்றும் வங்கித்தொழில் சட்டங்களில், குறிப்பாக நிதியியல் முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான மத்திய வங்கிக்கு பெருமளவு அதிகாரங்களை வழங்கும். **அத்தகைய நடவடிக்கைகள் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையினை உயர்த்தும் சாதனமொன்றாக இருக்கின்ற வேளையில் அதன் வகிபாகத்தினை காத்திரமான முறையில் ஆற்றுவதற்கான அதன் தேவைகள் தொடர்பான சுயாதீனமும் பேணப்படுகிறது.**

இவ்வுரையினை முடிப்பதற்கு முன்னதாக, விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டினையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் அதேபோன்று எமது முகவர் மற்றும் துணைத் தொழிற்பாடுகளையும் வழங்குவதற்கு எமது முயற்சிகளுக்குக் கருவியாக விளங்கும் பெருமளவு மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அவர்களது தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்களுக்காகவும் நிதியமைச்சிற்கும் மத்திய வங்கிக்குமிடையிலான நெருங்கிய ஒத்துழைப்பு ஆற்றல்வாய்ந்த பொருளாதார முகாமைத்துவத்திற்கு இன்றியமையாதது என்பதனால் மாண்புமிக நிதிய அமைச்சர் ரவி கருணாநயக்காவிற்கு அவரது ஆதரவற்காகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாணயச் சபை உறுப்பினர்களிடமிருந்து அளவிறந்த ஆதரவினையும் முன்மதியுடைய உள்ளீடுகளையும் பெற்றுக்கொள்கின்ற சிறப்புரிமை எனக்குக் கிடைத்தது. ஆகவே, திறைசேரியின் செயலாளர் முனைவர் ஆர்.எச்.எல் சமரதுங்க, திருமதி. மனோகரி இராமநாதன், திரு. கிறிசாந்த பெரேரா மற்றும் திரு. நிஹால் பொன்சேகா ஆகியோருக்கு எனது ஆழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். இந்நாளில் சவால் நிறைந்த பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பெருமளவான அவர்களது நேரத்தினை வழங்கியிருக்கின்றனர். துணை ஆளுநர்களான முனைவர் நந்தலால் வீரசிங்க, திரு. பி. சமரசிறி மற்றும் திரு. எஸ். லங்காதிலக ஆகியோர் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்கும் சிறப்புமிக்க உயர்ந்த தொழில்சார் நிபுணத்துவ மதியுரைகளுக்காகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக ஆனால் முக்கியமாக உதவி ஆளுநர்கள், திணைக்களத் தலைவர்கள், குறிப்பாகப் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் ஆகியோருக்கு இன்றைய கொள்கை ஆவணத்தினை வடிவமைத்தமைக்கவும் அதேபோன்று மிகக் கவனமாகவும் தேர்ச்சியுடனும் தொழில்சார் நிபுணத்துவத் தன்மையுடனும் மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தம்மை அர்ப்பணித்த மத்திய வங்கி அலுவலர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன். நான் பதவி ஏற்ற முதல் நாள் தொழில்சார் நிபுணத்துவம், தொழில் நுணுக்க சிறப்புத்தன்மை மற்றும் நேர்மை என்பன எந்தவொரு நிறுவனத்திற்கும் அதன் அலுவலர்களுக்கும் இன்றியமையாத வழிகாட்டல் கோட்பாடாக விளங்குமென நான் குறிப்பிட்டேன். இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களிடையே இப்பண்புகள் அதிகமாகவே காணப்படுவதனையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தங்களுக்கு நன்றி தங்கள் எல்லோருக்கும் 2017 புத்தாண்டு மகிழ்ச்சிகரமானதாகவும் சுபீட்சம் நிறைந்ததாகவும் அமைய வாழ்த்துகின்றேன்.